நம் நிம்மதியைக் குலைப்பது நம் பழைய தவறான செயல்கள் என்றால் இனி அப்படி செய்யக் கூடாது என்று உறுதியாக தீர்மானிப்பதைத் தவிர அதுகுறித்து நம்மால் செய்ய முடிவது வேறொன்றுமில்லை. நம்மை அலைக்கழிக்க வைப்பது அடுத்தவர் செயல்கள் என்றால் இனி அதுபோன்ற செயல்கள் நம்மை பாதிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து அதற்கேற்ப நம்மைத் தற்காத்துக் கொள்வதே நாம் செய்ய வேண்டிய அறிவார்ந்த செயல். அதை விட்டு அப்படியாகி விட்டதே என்று எண்ணி எண்ணி வருந்தியபடியே இருப்பது முட்டாள்தனமே.

*- என்.கணேசன்*

# இந்தியா மீதான எதிர்பார்ப்புகளும் ஏமாற்றமும்




**கோபி**
*ஒரு பேப்பர்*

'இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இச்சட்டமூலத்தை அகற்றுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை இந்தியா கடுமையாக எதிர்க்கின்றது. சிறிலங்கா அரசாங்கத்தின் போக்கில் மாற்றத்தைக் கொண்டுவர இந்தியா நடவடிக்கைகளை எடுக்கும். இலங்கைத் தமிழர்களுக்கு நாம் ஒருபோதும் அநீதி இழைக்க விடமாட்டோம்' இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமக்கு வாக்குறுதியளித்துள்ளதாக, அவரை டெல்லியில் சந்தித்துப் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார்.' பதின்மூன்றாம் திருத்தம் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை குறைக்க எடுக்கும் நடவடிக்கைகளையிட்டு, இந்தியா ஆத்திரமடைந்துள்ளதாக இந்திய அரசமட்டத்திலான உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தாக இந்தியசார்பு பத்திரிகையாளாரான டி.பி.எஸ். ஜெயராஜ் அவரது அண்மைய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார் இவற்றை வைத்துப்பார்க்கையில் இந்தியா, இலங்கை தொடர்பான தனது அதிருப்தியை இந்த ஒப்பந்தத்தை வைத்துச் சாதிக்கப்பார்ப்பது தெளிவாகிறது.

ஈழத்தமிழர்களுக்கான அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் இந்தியாவுக்கு அக்கறையிருக்கிறது என்ற பேச்சுக்களை அப்பாவித்தனமாக நம்புவதற்கு ஈழத்தமிழர்கள் தயாரில்லை என்றாலும், சிறிலங்காவுடனான முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வதற்கு, இந்தியா முன்னரைப்போல் தமிழத்தமிழர் விடயத்தை பயன்படுத்துமானால், அதிலிருந்து ஈழத்தமிழர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படக்கூடும் என்ற நப்பாசை கூட்டமைப்பினர் உட்பட சில தமிழர்களுக்கு இருக்கிறது. இன்னொருபுறத்தில், இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளமையால் பதின்மூன்றாம் திருத்த சட்டமூலத்தை இந்தியா பாதுகாக்கும் என்ற நம்பிக்கை பலருக்கு இருக்கிறது.

இவ் ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புப்பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதனை ஒரு சாதகமான விடயமாக ஏற்றுக்கொள்ளலாம். அவ்விரண்டு மாகாணங்களும் தமிழ் மக்களின் பாராம்பரிய வாழ்விடங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஒப்பந்தத்தின் இரண்டாவது சரத்து அவற்றின் தற்காலிகமாக இவ்விரு மாகாணங்களும் இணைக்கப்படும் எனவும், இணைப்பைத் தொடர்வதனை முடிவெடுப்பதற்கு சிறிலங்காவின் பிரதமநீதியரசர் தலைமையில் ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட குழுவின் மேற்பார்வையில் கிழக்கு மாகாணத்தில் அபிப்பிராய வாக்கெடுப்பு நாடாத்தப்படும் எனவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முடிவு சாதாரண பெரும்பான்மையின் மூலம் எட்டப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், இன்றைய நடைமுறை யதார்த்தத்தின்படி, மேற்படி நடைமுறைகளின் பிரகாரம் இரண்டு மாகாணங்களையும் இலகுவாகப் பிரித்திருக்க முடியும். இருப்பினும் ஜே.வி.பி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்து அதனை நடைமுறைப்படுத்தியது. அப்போது எதுவித கருத்தையும் தெரிவிக்காத இந்திய அரச தரப்பினர் இப்போது பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தையிட்டு சிரத்தை கொள்வது சிறிலங்காவுடனான அதன் முரண்பாட்டை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டுள்ளதால், பலமற்ற நிலையில், பதின்மூன்றாம் திருத்தத்தை விட்டால் வேறு வழியில்லை என்ற 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' நிலமைக்கு தமிழர்கள் வந்துவிட்டதாக இந்திய ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். சிறிலங்கா பாராளுமன்றத்திலும், வெளியிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிடும் கருத்துகளும் அவர்களுக்கு வாய்பாக அமைந்துள்ளன. ஆதலால் 2009க்கு முன்னர், பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தை இருப்பு அழிந்துபோன டோடோ பறவையுடன் ஒப்பிட்ட சம்பந்தன், இப்போது அது முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என மன் மோகன் சிங் கூறியதையிட்டு திருப்பதியடைந்துள்ளார்.

'இலங்கைத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதனை இந்தியா அனுமதிக்காது' என்ற மன்மோகனின் கூற்றை ஏற்றுக்கொள்ளாத தமிழர்களும் ஒருவிடயத்தை தர்க்கரீதியான நியாயமாக முன்வைக்கிறார்கள். அதாவது சிறிலங்காவுடனான உறவுகளில் பாதிப்பு ஏற்படும்போது, அல்லது இந்தியாவின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக சிறிலங்கா நடந்துகொள்ளும்போது, இந்தியாவிற்கு இருக்கிற ஒரே ஒரு துருப்புச்சீட்டாக இலங்கை - இந்திய ஒப்பந்தமே உள்ளது. தனது நலனுக்காகவாவது அதனைத் தக்கவைக்க இந்தியா முயற்சி எடுக்கும் என அவர்கள் நம்புகிறார்கள்.

இதற்கிடையே இந்தியாவில் அடைக்கலம் கொடுத்து தங்க வைக்கப்பட்டுள்ள ஈ.என்.டி.எல்.எப். குழுவினைச் சேர்ந்தவர்களையும், 2009ம் ஆண்டுக்கு பின்னர் இந்தியாவிற்கு 'தப்பிச்' சென்ற சில விடுதலைபுலி உறுப்பினர்களையும் இணைத்து ஒரு ஆயுத இயக்கம் இந்தியாவில் உருவாக்கப்படுவதாகவும், அதற்கு இந்திய உளவுத்துறையினர் பயிற்சி வழங்குவதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. இதற்கான ஆட்திரட்டும் பணியில் வன்னியிலிருந்துவந்து தமிழ்நாட்டில் குடியேறியிருக்கும், 'அரசறிவியாலளர்' ஒருவர் ஈடுபட்டு வருதாகவும் பரவலாகப் பேசப்பட்டுவருகிறது. இவை யாவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளாக இருப்பினும், இச்செய்திகள் இந்தியா ஈழத்தமிழருக்காக எதனையோ செய்யத்துடிக்கிறது என்ற நம்பிக்கையை சிலருக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியா தனது நலன்களை அடைவதற்காக ஈழத்து இளைஞர்களை பயிற்றுவித்து ஒரு கூலிப்படையினை உருவாக்குமானால் அதன் தாற்பரியம் எப்படியிருக்கும் என்பதனை இவ்விடயத்தில் முன்னனுபவம் உடையவர்களைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

அண்மையில் இரத்மலானவில் உள்ள கொத்தலாவல இராணுவப் பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு நிகழ்வில் தேசியப்பாதுகாப்பு தொடர்பாக சிறப்புரையாற்றிய கோத்தாபாய இராஜபக்ச சிறிலங்காவின் தேசியபாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களாக அமையக்கூடிய விடயங்கள் பற்றிக் கூறியவற்றை இவ்விடத்தில் கவனத்தில் எடுத்தல் பொருத்தமாக இருக்கும். 'இப்பிராந்தியத்தில் தொடர்ந்து அதிக அக்கறை செலுத்தும் அமெரிக்கா இந்தியாவுடன் நெருக்கமாக அணிசேருமானால் அது சிறிலங்காவிற்கு ஆபத்தினை ஏற்படுத்துவதாக அமையும். மாலைதீவில் அமெரிக்கா தளம் அமைப்பது இப்பிராந்தியத்தின் தோற்றத்தினை மாற்றுவதாக அமையும். இம்மாற்றங்களை சிறிலங்காவின் தேசிய பாதுக்காப்பின் அடிப்படையில் பார்ப்பது அவசியம்' எனக்குறிப்பிட்டுள்ளார். கோத்தாபாய இந்தியா வைப்பற்றி தனியாக எதுவும் குறிப்பிடவில்லை என்பதிலிருந்து, இந்தியா தனித்து தமக்கு அச்சுறுத்தலாக இருக்கப்போவதில்லை என சிறிலங்கா கருதுவதாகத் தெரிகிறது. ஆனால் தமிழ் நாட்டின் அழுத்தம் அதிகரிக்கும்போது இந்தியா சிறிலங்காவுக்கு எதிராகச் செயற்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே தற்போதைய நிலையில், சிறிலங்காவிற்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய நிலையில் இந்தியா இருக்கிறதா? அல்லது அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலை எதிர்நோக்குகின்ற நிலையில் கொங்கிரஸ் கட்சி வெறுமனே 'ஸ்ரண்ட்' காட்டுகிறதா என்பதனை ஆய்ந்தறிய வேண்டியுள்ளது. பாரதீய ஜனதாகட்சியும் அதன் தோழமைக் கட்சிகளான இந்துத்துவா கட்சிகளும் தம் பங்கிற்கு சிறிலங்கா விடயத்தில் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன என்பதனை அவற்றின் பிரதிநிதிகளின் அண்மைய பயணத்தின்போது வெளியிடப்பட்ட கருத்துகளிலிருந்து அறிய முடிகிறது.

**இந்தியா தனது நலன்களை அடைவதற்காக ஈழத்து இளைஞர்களை பயிற்றுவித்து ஒரு கூலிப்படையினை உருவாக்குமானால் அதன் தாற்பரியம் எப்படியிருக்கும் என்பதனை இவ்விடயத்தில் முன்னனுபவம் உடையவர்களைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.**

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக ஆய்வுகளை நடாத்திய பொஸ்டன் பல்கலைகழகத்தில் சர்வதேச உறவுகள் தொடர்பான கற்கை நெறியைப் போதிக்கும் பேராசிரியர் மஞ்சரி சட்டர்ஜி 'இந்தியவின் பலகீனமான வெளியுறவுக் கொள்கை' (India's Feeble Forien Pokicy) என்ற தலைப்பில் `Foreign Policy" சஞ்சிகையில் ஒரு கட்டுரை வரைந்திருக்கிறார். இக்கட்டுரையில் அவர் தெரிவித்திருக்கும் கருத்துகள் கவனத்திற்குரியவை. இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கை தனிப்பட்டவர்களினை கருத்துச்சார்ந்து அமைவதாகக் குறிப்பிட்டிருக்கும் அவர் வெளிவிவகாரத் திணைக்களத்தில் உள்ள உயரதிகாரிகளே தமது விருப்பிற்கேற்ப அதனை வடிவமைக்கிறார்கள், இதில் அரசின் உயர்மட்டத்தலைவர்களின் கருத்துகள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை, அவ்வாறான முடிவுகளை எடுக்கக்கூடிய தகமையும் அரசியல்தலைவர்களிடம் இல்லை. ஆதலால் வெளிவிவகாரக் கொள்கையில் தொலைநோக்குடனான இலக்கு எதனையும் அது கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்திருக்கிறார். இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கையை வகுப்பதில் பிரதமர் அலுவலகம், தேசிய பாதுக்காப்புச் சபை, வெளிவிகார அமைச்சு ஆகியவை பங்கெடுக்கின்றன. இருப்பினும் இந்தி வெளிவிவகாரச் சேவையிலிருந்தே (Forign service) அம்மூன்றுக்கும் உயர் அதிகாரிகள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்களில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மிகவும் பலம் பொருந்தியவராக காணப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார். தற்போதைய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் பற்றியும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஈழத்தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பது பற்றி தமிழ் அரசியல் தலைவர்களை விட தங்களுக்குத் தெரியும் என போர் முடிந்த சில நாட்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் சிவ் சங்கர் மேனன் தெரிவித்தாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் யாழ்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். இவற்றைக் கவனத்தில் எடுத்தால் இந்தியாவை நம்பியிருந்தால் இன்னொரு தடவை ஏமாற்றப்படும் சந்தர்ப்பங்களே அதிகமாகத் தென்படுகின்றன.

## ஒரு பேப்பர்

**கிடைக்குமிடங்கள்**

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

# Tamil Community Housing Association

## தமிழர் சமூக வீட்டுவசதிக் கழகம்

**Tamil Housing - *culturally centred, community driven***

Tamil Housing (TCHA), a registered housing provider, with more than 25 years of servicing the community and currently own and manage over 300 homes across London. We have exciting plans for future growth particularly in South London. We have recently carried out a fundamental review of our organisational structure so as to improve our service delivery and offer to tenants. We are currently recruiting to the following three new roles

**HOUSING SERVICES MANAGER    Permanent - Salary c£37k - Location Tottenham, London N15 4AG    REF TCHA0010513**

The Housing Services Manager will be member of TCHA's Senior Management who has the responsibility for driving forward the next phase of our service improvement programme to strengthen our Housing Services and to improve the professional standards we adopt in order to provide high quality services to our tenants and the community. The successful candidate will be responsible for the effective and efficient delivery of all aspects of Tamil Housing's housing services and be responsible for the managing a small team of Housing and Neighbourhood Officers. Applicants should be educated to degree level or hold an appropriate qualification in a housing or related discipline. A full, clean, driving license is desirable.

**HOUSING AND NEIGHBOURHOODS OFFICER    Salary c£27k - Location Tottenham, London N15 4AG - REF TCHA0020513**

The successful candidate will be part of Tamil Housing's Housing Services Team and will be expected to provide high quality housing and resident management services across a housing patch of approximately 150 properties located across a number of London boroughs. A full, clean, driving license is essential.

**ADMINISTRATIVE OFFICER - Permanent - Salary c£22k - Location Tottenham, London N15 4AG - REF TCHA0030513**

The Administrative Officer will be responsible for providing administrative support to the housing services team including collating key performance indicator data. Experience of working in the housing sector will be an advantage. We expect the successful candidate to manage his/her workload effectively and able to work independently to support the housing team to deliver excellent housing services that puts tenants and community first.

A strong commitment to equality and working in the community are essential for all the posts.

Closing date for applications: 1st July 13. Interviews will be held on week commencing 8th July 13

For an informal discussion, please contact **Mr.Manjul Shah on 0203 514 0898 or 07734 414662.** For a recruitment pack please contact the Office Administrator **Mrs Thurkka Manisegaran on 020 8493 7160** or email at thurkka@tamilhousing.org.uk. TCHA is an equal opportunity employer and we welcome applications from all sections of the community. Tamil House, Unit 2, Fountayne Business Centre, Tottenham, N15 4AG.

## Discourses by 'Kalaimamani' Smt Desa Mangaiyarkarasi,

## Anointed disciple of Sri Kripananda Variyar



**மனித வாழ்வு**
**மாண்புறும் வழி**

'கச்சியப்பர், கம்பன், கண்ணன்,
குறள் காட்டும் வழி'

**Dates: 5th to 10th July**

Venue: Canons High School,
Shaldon Road, Edgware,
Middlesex, HA8 6AN

Timing: **6.30**PM to **8.30** PM

Daily Ticket: **£ 6** per day

Season Ticket: **£25** (for all 6 days)



**தலை எழுத்தையும்**
**மாற்றும்**
**தமிழ் கடவுள் முருகன்**

**Dates: 11th & 12th July**

Venue: Eastham Town Hall,
Barking Road,
Eastham, E62RP

Timing: **6.30**PM to **8.30**PM

Daily Ticket: **£10** per day

Season Ticket: **£15** (for both days)



**சித்தமெல்லாம்**
**சிவமயமே**

ஆனிதிருமஞ்சனம்

**Date: 13th July**

Venue: Bharatiya Vidya Bhavan,
4a, Castletown Road,
West Kensington,
London, W14 9HE

Timing: **6.30**PM to **8.30**PM

Daily Ticket: **£10, £15**

*For Ticket contact...*

*Revathy – **07582185377** or Karthik **07776577880***
*For the Bhavan Event alone, also **02073813086 / 4608***
*Email : sisnambalava@gmail.com*
*Visit : www.sisnambalava.org.uk*

*Ticket also available at*

- ***Akilan Enterprises***
  *274. High Street North,*
  *Manor Park, London, E12 6SA*
  *Tel: **0208 5480 033***
- ***Ganapathy Cash & Carry***
  *34-38, Ealing Road,*
  *Wembley, HA0 4TL*
  *Tel: **0208 2481 778***

**Season Ticket (For All 9 days) - £40/-**

**SPONSORS-**

State Bank of India · www.sbiuk.com · SARAVANAA BHAVAN · HDFC HOME LOANS · pride asia food · Harrow Council




# கொமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து இலங்கையை ஏன் நீக்க வேண்டும் ?

**சு.கி.கொண்டல்**
*(மே 17 இயக்கம்)*

கொமன்வெல்த் நாடுகளின் கூட்டம் இந்த முறை இலங்கையில் 2013ல் வருகின்ற நவம்பர் மாதம் 15ஆம் தேதியிலிருந்து 17ஆம் தேதிவரை நடைபெற உள்ளது. அப்படி ஒரு கூட்டம் இலங்கையில் நடைபெறுமானால் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இவ்கூட்டமைப்பின் தலைவராக இராஜபக்சவே இருப்பார் என்பது கூட்டமைப்பின் விதி.

கொமன்வெல்த் நாடுகள் என்பது பிரிட்டிஷ் ஆட்சிக்கு கீழ் காலனியாக இருந்த நாடுகளின் கூட்டமைப்பே ஆகும். இது 1867ம் விடுதலை பெற்ற கனடாவும் 1884ல் விடுதலை பெற்ற ஆஸ்திரேலியாவும் சேர்ந்து உருவாக்கியதே 'காமன்வெல்த் நாடுகள்' ஆகும். அதன்பின் பிரித்தானியாவிலிருந்து விடுதலை பெற்ற நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, அயர்லாந்து போன்ற நாடுகள் சேர்ந்து 1926ல் ஒரு மாநாட்டை கூட்டி அதில் ஒவ்வொரு நாடும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.ஆனால் இங்கிலாந்தின் மிகப்பெரிய காலனி நாடான இந்தியா 1947ல் விடுதலை பெற்றபின் ஏற்கனவே உள்ள நடைமுறையில் மாற்றம் கொண்டு வந்து 1949ல் இலண்டன் தீர்மானம் (London Declaration) மூலம் ஒரு புதிய காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்கியது. அதன்பின் 1950 மற்றும் 1960களில் காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் மேலும் பல புதிய நாடுகள் சேர்ந்து இன்று 54 நாடுகளுடன் அது செயல்பட்டு வருகிறது.இந்த காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பானது இரண்டு முக்கிய தீர்மானத்தின் அடிப்படையில் செயல்படுகிறது.

1. 1971ல் கொண்டுவரப்பட்ட சிங்கப்பூர் தீர்மானம்(Singapore declaration 1971 in Singapore)

2.1991ல் கொண்டுவரப்பட்ட ஹராரே தீர்மானம் (Harare declaration 1991 in Zimbabwe)

மேற்குறிப்பிட்ட இரண்டு தீர்மானமும் சில முக்கியமான பொதுவிதிகளை உறுப்பு நாடுகளுக்கு விதிக்கிறது அவை.

1. உறுப்பு நாடுகளில் வாழும் அனைத்து மக்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். (Equal Rights for all citizens)
2. உறுப்பு நாடுகளில் உள்ள மக்கள் பாலின ரீதியாகவும், இனரீதியாகவும், மத ரீதியாகவும், நிற அடிப்படையிலும் அல்லது அரசியல் ரீதியாகவும் பாகுபாடின்றி நடத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட விதிகளின் அடிப்படையில்தான் கொமன்வெல்த் கூட்டமைப்பில் உள்ள உறுப்பு நாடுகள் செயல்பட வேண்டும். அப்படி குறிப்பிட்ட விதிகளை மீறி உறுப்பு நாடுகள் செயல்படும் பட்சத்தில் அந்த நாட்டை காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து இடைநீக்கம் செய்யலாம் என்று விதிகள் கூறுகின்றன.

இதனடிப்படையில் 1995ஆம் ஆண்டு நைஜிரியா அரசு தனது நாட்டில் வாழ்ந்த பத்திரிகையாளரும் மற்றும் அங்குள்ள எண்ணைய் வளங்களை காக்கப் போராடிய ஒரு சமூகப் போராளியுமான கென் சரோ விவா( Ken Saro Wiwa) என்பவரையும் அவருடன் சேர்த்து பத்து பேரையும் தூக்கிலிட்டது. அதன் காரணமாக காமன்வெல்த் நாடுகளின் விதியான 'அரசியல் ரீதியாக தனது மக்களை கொன்றது' என்ற விதியின் அடிப்படையில் 1995ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகள் அந்த நாடு இடைநீக்கம் செய்யப்பட்டது.

அதன்பின் பாகிஸ்தான் 18 அக்டோபர் 1999ல் தனது நாட்டின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைத்து இராணுவ ஆட்சியை பர்வேஷ் முஷரப் நிறுவினார் என்பதற்காக ஹராரே தீர்மானத்தின் படி அப்பொழுது பாகிஸ்தான் இடைநீக்கம் செய்யப்பட்டது. மேலும் பிஜி மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளும் மோசமான மனித உரிமை மீறல்களுக்காக காமன்வெல்த் கூட்டமைப்பின் சட்டத்துறை வல்லுனர்களால் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இதில் பிஜி மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளானது இரண்டாவது முறையாக 2006 மற்றும் 2007 ஆகிய வருடங்களில் இடைநீக்கம் செய்யப்பட்டது. பிஜி நாட்டின் மீதான தடை இப்பொழுதும் தொடர்கிறது.

ஆனால் இதை விட பலமடங்கு மனித உரிமை மீறல்களையும், இனப் படுகொலைகளையும் செய்த, செய்து கொண்டிருக்கின்ற இலங்கையை ஏன் கொமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பு இன்னும் இடைநீக்கம் செய்யவில்லை?

இலங்கையை நீக்கம் செய்வதற்கான காரணங்கள்:

1. தனது சொந்த நாட்டில் வாழும் தமிழர்கள் என்ற தேசிய இனமக்கள் மீது கட்டாய சிங்களத் திணிப்பை திணித்து இன்றுவரை தமிழர்களை இனரீதியாகப் பிரித்தது காமன்வெல்த் கூட்டமைப்பின் 1971 மற்றும் 1991ம் விதியின் படி விதிமீறலாகும்.
2. இலங்கையில் தமிழ் பேசும் இந்துக்களின் கோவில்களையும் மற்றும் முஸ்லீம்களின் பள்ளிவாசல்களையும் இடித்து அங்கு பவுத்த மதம் மட்டுமே இருக்க வேண்டும் என்று மதரீதியாக தனது மக்களை துன்புறுத்தி வருவது ஒரு அப்பட்டமான விதிமீறலாகும்.
3. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று சொல்லி தனது சொந்த நாட்டு மக்கள் 90,000 பேரை முள்வேலிக்குள் அடைத்து வைத்து அவர்களுக்கு அடிப்படை வசதிகள் கூட செய்து கொடுக்காதது மற்றும் அங்குள்ள பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதியில் மட்டும் 60,000 கைம் பெண்கள் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் சமீபத்தில் அறிவித்தது இப்படி பெண்களுக்கு எதிராக கொடுமைகள் செய்வதும் காமன்வெல்த் கூட்டமைப்பின் 1971 மற்றும் 1991ம் விதியின் படி விதிமீறலாகும்.

**நைஜீரியாவில் ஒரு பத்திரிக்கையாளர் கொல்லப்பட்டார் என்பதற்காக அந்த அரசை இடைநீக்கம் செய்த காமன்வெல்த் கூட்டமைப்பு, இலங்கையில் இதுவரை 60க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்களை காணவில்லை என்று சமீபத்தில் வெளிவந்த ஐ.நா தீர்மானத்திலேயே குறிப்பிடப்பட்டதை கண்டுகொள்ளவில்லை.**

4. நைஜீரியாவில் ஒரு பத்திரிக்கையாளர் கொல்லப்பட்டார் என்பதற்காக அந்த அரசை இடைநீக்கம் செய்த காமன்வெல்த் கூட்டமைப்பு, இலங்கையில் இதுவரை 60க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்களை காணவில்லை என்று சமீபத்தில் வெளிவந்த ஐ.நா தீர்மானத்திலேயே குறிப்பிடப்பட்டதை கண்டுகொள்ளவில்லை. மேலும் 'சண்டே லீடர்' பத்திரிக்கையின் ஆசிரியர் லசந்த விக்கரமசிங்கே 'நான் இந்த அரசால் விரைவில் கொல்லப்படுவேன்' என்று முன்னரே தனது பத்திரிக்கையில் எழுதினார் அதன் படியே இராசபக்ச அரசால் கொல்லப்பட்டார். இப்பொழுது சமீபத்தில் ஏப்ரல் 15, 2013 அன்று உதயன் பத்திரிக்கை அலுவலகங்கள் அரசால் அடித்து நொறுக்கப்பட்டது. இதுபோன்ற எண்ணற்ற ஜனநாயக மீறலை இலங்கை அரசு செய்கிறது.
5. மேலும் தனது அரசுக்கு ஆதரவாக இல்லை என்ற காரணத்தால் இலங்கையின் தலைமை நீதிபதியான சிறானி பண்டாராநாயகாவை ஜனவரி 13, 2013அன்று நீதிபதி பதவியை விட்டு நீக்கிஇலங்கையின் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு காமன்வெல்த் கூட்டமைப்பின் 1971 மற்றும் 1991ம் விதியினையும் மீறி செயல்பட்டு வருகின்றது இலங்கை அரசு.

**இலங்கை அரசு காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள எந்த விதிகளையும் பின்பற்றாமல் தான்தோன்றித்தனமாக செயல்படுகிறது. இத்தனை காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பை இலங்கையில் நடத்துவதை நிறுத்துவதோடு மட்டுமி ல்லாமல் தொடர்ந்து விதிகளை மீறும் இலங்கையை காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் இருந்தே நீக்கம் செய்ய வேண்டும்**

6. இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் மக்களை இராணுவத்தைக் கொண்டு மிரட்டுகிறது. அங்கு 22 மக்களுக்கு ஒரு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் தனது அறிக்கையில் சொல்கிறது. மேலும் 1980ல் இலங்கையின் இராணுவ பலம் தரைப்படை, விமானப் படை, கடல்படை ஆகிய மூன்றையும் சேர்த்தே 30,000 ஆக இருந்தது. பின் இராசபட்சே பதவி ஏற்றபோது அது 1,25,000 ஆக இருந்தது. ஆனால் 2005 மற்றும் 2009 காலகட்டத்தில் மட்டும் இராசபட்சே அரசு மேலும் மேலும் ஆட்களை சேர்த்து இன்று அது 300,000 ஆக இருக்கிறது. ஆனால் திட்டமிடப்பட்ட இலக்கு என்பது 4,50,000 பேர். இப்படி இலங்கையை இராணுவ மயமாக்க இராசபக்ச அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. இதே காரணத்துக்காகவே பாகிஸ்தான் அரசு 1999ல் காமன்வெல்த் கூட்ட்மைப்பில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டது.

இவ்வாறு இலங்கை அரசு காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள எந்த விதிகளையும் பின்பற்றாமல் தான்தோன்றித்தனமாக செயல்படுகிறது. இத்தனை காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பை இலங்கையில் நடத்துவதை நிறுத்துவதோடு மட்டுமில்லாமல் தொடர்ந்து விதிகளை மீறும் இலங்கையை காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் இருந்தே நீக்கம் செய்ய வேண்டும் என்பதே உலகமெங்கும் இருக்கும் மனித உரிமை ஆர்வலர்களின் கோரிக்கையாகும்.



# நாட்டை விட்டு, வீட்டைப்பற்றி



**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

அண்மையில் எங்களில் சிலருக்கு நாட்டு பிரச்சனையை விட, வீட்டுப்பிரச்சனை தான் நித்தமும் தலையிடியாக இருப்பதால் அதுபற்றி கொஞ்சம் அறிந்து கொள்வோம். முதலில் இந்த வருடம் சித்திரை மாத இறுதியில் அமுல்படுத்தப்பட்ட படுக்கை அறைக்கான வரியைப்பற்றி பார்போம். இது உள்ளூர் ஆட்சிசபைக்கான வீடுகளிலும் (கவுன்சில்) அரசு சார்பற்ற கவுசிங் அசோசியேசன் வீடுகளிலும் வசிக்கும், ஓய்வூதியம் பெறும் வயதிற்கு உட்பட்ட, அரசாங்க உதவிப்பணத்தில், அவர்களின் முழுவதுமான வீட்டு வாடகைக்கோ அல்லது பகுதியான வீட்டு வாடகைக்கோ தங்கியிருப்பவர்கள், அவர்களின் தேவைக்கு அதிகமாக படுக்கை அறைகளை வைத்திருக்கும் பட்சத்தில் அவர்கள் ஒரு குறித்தளவு தொகையை மாதம் மாதம் வரியாக அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியிருக்கும்.

மேலதிகமான படுக்கையறைகள் இருந்தாலும், நீங்கள் கடந்த ஒரு வருடகாலப்பகுதில் (52 Weeks) அரசாங்க வீட்டு உதவிபணத்தில் இருக்காமல் இருந்திருந்தால், புதிய வீட்டு வருமான உதவி பணத்தில் இருந்து, மேலதிகமான படுக்கைக்கான வருமான வரி 13 வாரங்களுக்கு பின்பு தான் அறவிப்படப்படும்.

இது நீங்களோ, உங்களது கணவரோ ஓய்வூதியம் பெறும் வயதை அடைந்துவிட்டாலோ, அல்லது பகுதி வீட்டுக்கு சொந்தக்காரராக இருந்தாலோ அல்லது கரவான், படகுவீடு, தற்காலிக வீடு போன்றவற்றில் வசித்தாலோ 13 வாரங்களுக்கு வரிவிலக்கு பெற்றுக் கொள்ளலாம்.

உங்களுக்கு தரப்படும் அரசாங்க வீட்டு வாடகையை 100 விகிதம் என்று வைத்தால் அதில் மேலதிகமாக இருக்கும் ஒரு அறைக்கு, படுக்கையறை வரி 14 விகிதமும், மேலதிகமாக இருக்கும் இரண்டாவது அறைக்கு, படுக்கை அறை வரி 25 சதவிகிதமும் அறவிடப்படும்.

இப்போ எப்படி ஒரு குடும்பத்திற்கு இத்தனை அறைகள் தான் தேவை என்று முடிவெடுப்பது. கணவன், மனைவிக்கு ஒரு அறையும், 16 வயதிற்கு மேற்பட்டவருக்கு ஒரு அறையும், ஒரு பாலாரான 16 வயதிற்கு உட்பட்ட இரு பிள்ளைகளுக்கு ஓர் அறையும், இரு பாலாரான பத்து வயதிற்கு உட்பட்ட இருபிள்ளைகளுக்கு ஒரு அறையும், மேலதிகமாக இருக்கும் பிள்ளைக்கு ஓர் அறையும், உங்கள் கணவருக்கோ அல்லது மனைவிக்கோ பாராமரிப்புக்கென ஒருவர் தங்க நேரும் நிலையில் அவருக்கென ஒரு அறையும் வைத்திருக்கலாம்.

உங்களோடு வசிக்காத பிள்ளைகள் இதில் கணிக்கப்பட மாட்டார்கள். நீங்கள் உங்கள் பிள்ளையை பகுதிநேரம் தான் பாராமரிப்பதாக இருந்தால், யார் அப்பிள்ளைக்கான சிறுவர்களுக்கான உதவிபணத்தை (Child benefit) எடுக்கிறார்களோ, அவர்களோடுதான் பிள்ளை வசிப்பதாக கணிக்கப்படும்.

கல்வியின் நிமித்தம் உங்கள் பிள்ளைகள் தற்காலிகமாக வெளியே தங்கி படித்தாலும் ஒரு வருடத்திற்கு உட்பட்ட காலப்பகுதியில் இடை இடையே வந்து போகும் பட்சத்தில் அது மேலதிகமான அறையாக கணிக்கப்படமாட்டாது.

பின்வரும் சந்தர்பங்களில் மேலதிக அறைக்கு வீட்டு உதவி பெறமுடியாது. பிரிந்திருக்கும் பெற்றேரிடம் வந்து போகும் பிள்ளைக்கான அறை, வருந்தத்தின் நிமிந்தம் கணவன், மனைவியும் தனிதனி அறையை பாவிக்கும் சந்தர்ப்பத்தில், மாற்று வலுவுள்ளவர்களுக்கான மருந்துவ உபகரணங்களை வைப்பதற்கான அறை.

படுக்கை அறை வரியின் நிமித்தம் உங்கள் வாடகைக்கும், அரசாங்கம் தரும் உதவிப் பணத்திற்கும் இடையில் இடைவெளி இருக்கும் பட்சத்தில் அதை இட்டு நிரப்ப வேண்டியது உங்கள் கடமையாகிறது. அப்படி செய்ய தவறும் பட்சத்தில் உங்கள் வீட்டை இழக்கும் சந்தர்ப்பம் அதிகரிக்கும். உங்களால் வாடகை கொடுக்கமுடியாமல் வரும் சந்தர்பத்தில் படுக்கை அறை குறைந்த, வீட்டுக்கு மாறுவது தலை சிறந்தது.

அத்தோடு ஏறக்குறைய புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட உயர்ந்தபட்ச உதவிப்பண திட்டத்தில் ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, குழந்தைகள் எல்லோரையும் சேர்த்து £500 ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரத்திற்கும், £350 தனி நபருக்குமான அதிகபட்சத் தொகையாகும். இத்திட்டம் படிபடியாக ஒவ்வொரு உள்ளூராச்சியாக அறிமுகப்படுத்தப்பட்டு வந்து செப்டம்பர் மாதம் எல்லா இடமும் உள்ளடக்கப்படும்.

எங்களின் முக்கிமான பிரச்சனை என்னவென்றால் வாடகை நிலுவையை கேட்டு வரும் கடிதங்களை, ஒன்றில் வாசிக்காமல் குப்பைக்குள் போடுதல் அல்லது வாசித்து விட்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காமல் வழக்கு மன்றதால் வரும் கடிதத்திற்காக காத்திருந்தல். ஆனால் வழங்குமன்றத்தால் வழக்குக்கு வரும்போது அத்தோடு அதற்குரிய பதிவாளருக்கான செலவு என £120 வரையில் அறிவிட்டு அதையும் சேர்த்து கட்டச் சொல்வார்கள்.

அத்தோடு நாம் முதன் முதலில் அரசாங்க உதவிப்பணம் எடுக்கும் போது இருந்ந நிலமையில் இருந்து இப்போ இருக்கும் நிலமை வரை ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டால் அதையும் அரசுக்கு உடனுக்குடன் அறிவிப்பதில்லை. அதனால் பின்பு அது தெரியவரும் போது மேலதிகமாக தந்ந பணத்தை எம்மிடம் இருந்து மீளப்பெறும் போது மிகவும் பணநெருக்டிக்கு உள்ளாக நேரிடும். மேலதிக விபரங்களுக்கும், அறிவுரைக்கும், வீட்டு பிரச்சனையால் தவிப்பவர்களுக்கு உதவுவதற்கென பல நிறுவனங்கள் உள்ளன.

Advice UK – 0207407 4070,

Citizens advice- 0207833 2181,

Community Legal service direct – 08453454345,

Communities and Local government – 020 7944 4400,

Housing Corporation -0845 2307000,

Housing Moves – 0845 021 2020,

Housing rights service – 02890245640

Leasehold Advisory service – 020 7374 5380

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper


MASS GLOBAL SHIPPING
MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!
உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.



Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions



ESOL Citizenship Class & Test £150
பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம். நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்.
Understand the knowledge of life in the UK.
We provide combined intensive English language (ESOL) with Citizenship classes & Exam.
We provide the following courses and services:
Citizenship test and life in the UK test
For 'indefinite leave to remain' & British passport - A1 Spouse visa test

We also provide: ILETS, B1, B2&C1 for Higher Education and Business visa
* Courses from Only £ 150.00 with no hidden cost, one payment until you pass (limited offer)
Peel House, 32-44, London Road, Modern, SM4 5BT
Tel: 020 3305 6439 Mob: 07828764222
www.ukcitizenshiptest.org (Walking distance from Morden Station)



ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!
SUBSCRIPTION FORM
Name:
Address :
Postcode:
Telephone:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# மேற்குலகம் - சிறீலங்கா - இந்தியா

# மீண்டும் ஒரு நாடகம்



## வேல்ஸ் இலிருந்து அருஷ்

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் சந்திக்கும் கூட்டத்தில் சிறீலங்காவும் கலந்துகொண்டிருந்தது. எனினும் சிறீலங்கா அந்த அமைப்பில் இருந்து நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அன்று முன்வைக்கப்பட்டபோதும், 54 நாடுகளை கொண்ட அமைப்பின் பெரும்பாலான நாடுகள் அதனை உதாசீனப்படுத்தியிருந்தன. இந்தியா வழமைபோல மௌனம் காத்து சிறீலங்காவை காப்பாற்றியிருந்தது.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அனைத்துலக அமைதி, பாதுகாப்பு மற்றும் அங்கத்துவ நாடுகளில் நிலவும் ஜனாயக ஆட்சிமுறை உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்படுவதுண்டு. எனவே ஜனநாயக நடைமுறைகளை பின்பற்றத் தவறும் நாடுகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும் இடம்பெறுவதுண்டு. சிறீலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் இடம்பெற்றுவரும் மனித உரிமைமீறல்கள் தொடர்பில் தமது கவனத்தை செலுத்திய கனடாவும் பிரித்தானியாவும் இந்த ஆண்டு நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தை புறக்கணிக்கப்போவதாக 2011 ஆம் ஆண்டு தெரிவித்திருந்தன. எனினும் அதற்கு இந்தியா உட்பட ஏனைய நாடுகளின் ஆதரவுகளை அவர்களால் திரட்டமுடியவில்லை. ஆனால் தற்போது தமது நிலைப்பாட்டில் இருந்து பிரித்தானியாவும் பின்வாங்கியுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் இடம்பெறும் கூட்டத்தில் பிரித்தானியா பிரதமர் டேவிட் கமரன் கலந்துகொள்ளவுள்ளதாகவும், பிரித்தானியா மகாராணிக்கு பதிலாக இளவரசர் சார்ல்ஸ் கலந்துகொள்ளவுள்ளதாகவும் பிரித்தானியா அரசு தெரிவித்துள்ளது. பிரித்தானியாவின் இந்த நடவடிக்கை தமிழ் மக்களை கவலைகொள்ளவைத்துள்ளது. கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் அவர்கள் மாநாட்டை புறக்கணிக்கப்போவதாக கனேடிய அரச தகவல்கள் தெரிவித்துள்ள போதும் கனேடிய அமைச்சர்களின் குழு மாநாட்டில் கலந்துகொள்வதை நாம் ஒரு முற்றான புறக்கணிப்பாக எடுத்துக்கொள்ள முடியாது. பொதுநலவாய நாடுகளின் கூட்டமாக இருந்தாலும் சரி, கடந்த இரு தடவைகள் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானமாக இருந்தாலும் சரி எல்லாவற்றிலும் ஒரு மென்மையான போக்கு காணப்படுவதை நாம் அவதானிக்க முடியும்.

அதாவது அமெரிக்காவின் தீர்மானமானது சிறீலங்கா அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆமோதிப்பதாகவே அமைந்துள்ளது. பொதுநலவாய அமைப்பை பொறுத்தவரையில், ஒரு அங்கத்துவ நாட்டை பொதுநலவாய அமைப்பில் இருந்து இடைநிறுத்துவது நடைபெறாத ஒன்று அல்ல. முன்னர் பாகிஸ்த்தான் மற்றும் பிஜி ஆகிய நாடுகள் பொதுநலவாய அமைப்பில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தன. 2007 ஆம் ஆண்டு உகண்டாவின் தலைநகர் கம்பாலாவில் இடம்பெற்ற கூட்டத்தொடரிலேயே பாகிஸ்த்தானை இடைநிறுத்தும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பை வெளியிட்டதில் பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் டேவிட் மில்லிபான்ட் முக்கியபங்கு வகித்திருந்தார். பாகிஸ்த்தானில் ஜனநாயகத்தை நிலைநாட்டத் தவறியமை, அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்தியமை, ஊடகங்கள் மீதான அழுத்தங்களை மேற்கொண்டமை, மனித உரிமை மீறல்கள் தொடர்பான காரணங்களை முன்வைத்து பாகிஸ்தான் மீதானதீர்மானம் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொண்டுவரப்பட்டிருந்தது. சுருக்கமாக கூறுவதானால் பொது நலவாய நாடுகளின் அடிப்படை விதிமுறைகளை பாகிஸ்தான் மீறிவிட்டதாக டேவிட் மில்லிபான்ட் தெரிவித்திருந்தார். பொது நலவாய நாடுகளின் இந்த தீர்மானத்தை பாகிஸ்தானின் நெருக்கிய நட்பு நாடான சிறீலங்காவும், மலேசியாவும் கடுமையாக எதிர்த்த போதும் பாகிஸ்தான் இடைநிறுத்தப் பட்டிருந்தது. இதேபோலவே சிம்பாபே மீதும் 2002 ஆம் ஆண்டு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்தது. பொதுநலவாயநாடுகளின் அமைப்பில் இருந்து முதலில் இடைநிறுத்தப்பட்ட சிப்பாபே பின்னர் முற்றாக நீக்கப்பட்டது.

**பாகிஸ்தான் மற்றும் சிம்பாபே ஆகிய நாடுகளில் இடம்பெற்ற வன்முறைகளுடன் ஒப்பிடும் போது சிறீலங்காவில் இடம்பெற்ற வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகள் என்பன மிக அதிகம்**

பாகிஸ்தான் மற்றும் சிம்பாபே ஆகிய நாடுகளில் இடம்பெற்ற வன்முறைகளுடன் ஒப்பிடும் போது சிறீலங்காவில் இடம்பெற்ற வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகள் என்பன மிக அதிகம். அது தொடர்பாக பல ஆயிரம் ஆதாரங்களும் அனைத்துலக சமூகத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையினாலோ, மனித உரிமை அமைப்புக்களினாலோ அல்லது பிராந்திய அமைப்புக்களினாலேயோ எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியவில்லை. மறு வளமாக காலத்தை இழுத்தடித்து குடியேற்றங்கள், மொழிமற்றும் இனக் கலப்புக்கள் மூலம் தமிழர்களில் தாயகக் கோட்பாடுகளை சிதைத்துவிடும் சிறீலங்கா அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கியுள்ளது மேற்குலகம்.

சிறீலங்காவில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பில் தானே விசாரணைகளை மேற்கொள்ளும் சிறீலங்கா அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அவகாசம் வழங்கும் மேற்குலகம் தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்திருப்பதாகவே அர்த்தம் கொள்ளமுடியும். சிறீலங்காவில் முன்னர் அமைக்கப்பட்ட ஒரு டசினுக்கு மேற்பட்ட ஆணைக்குழுக்கள் எந்த முடிவையும் எட்டாது காணாமல் போயிருந்தன. ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசுகளும் தமது பதவிக் காலம் முடியும் வரையிலும் சில ஆணைக் குழுக்களை அமைத்து அனைத்துலக சமூகத்தை ஏமாற்றி வந்திருந்தன என்பதே வரலாறு.

2006 ஆம் ஆண்டு மூதூரில் படுகொலை செய்யப்பட்ட தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 17 பணியாளர்களின் படுகொலைகள் தொடர்பில் அமைக்கப்பட்ட ஆணைக் குழுவின் தலைவராக இருந்தவரே அண்மையில் ஐ.நாவில் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவரான இந்தோனேசியாவைச் சேர்ந்த தருஸ்மன் என்பவர். ஆனால் சிறீலங்காவில் அன்று அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகளை சிறீலங்கா அரசு திட்டமிட்டே சிதைத்துவருவதாகவும், அரசியல் அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், அது ஒரு சுயாதீன விசாரணைக்குழு அல்ல எனவும் தெரிவித்து தருஸ்மன் அதில் இருந்து விலகியிருந்தார்.

மேலும் சிறீலங்கா அரசின் நல்லிணக்க ஆணைக்குழு என்பது ஒரு விசாரணைக் குழு அல்ல என்பதை எல்லோரும் அறிவார்கள். எனினும் அமெரிக்காவின் இரண்டாவது தீர்மானத்தை தொடர்ந்து அனைத்துலக சமூகத்தை ஏமாற்றுவதற்காக சில நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம் சிறீலங்கா அரசுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் உண்டு.

அவசர அவசரமான மீள் குடியமர்த்தல்கள், நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தல்கள், கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் மற்றும் நடைபெறவுள்ள வடக்கு மாகாணாசபைக்கான தேர்தல் போன்றவற்றின் பின்னனி அது தான்.

இந்த இரு மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதன் மூலம் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடை முறைப்படுத்த முற்படுவதாக சிறீலங்கா அரசு இந்திய மத்திய அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் நாடகம் மேற்குலகத்தின் அசை வைக் கட்டுப்படுத்தலாம். அதற்கான பரிந்துரைகளை இந்தியாவின் ஊடாக மேற்குலகத்தின் முன் முன்வைக்க முடியும் என்பது ஒருபுறம் இருக்க சிறீலங்கா அரசின் தயவில் இயங்கி வரும் அரசியல் கட்சிகளையும், தனிநபர்களையும் வடமாகாண சபைத் தேர்தலில் களமிறக்குவதன் மூலம் வடக்கில் தற்போது நிலைகொண்டுள்ள சிறீலங்கா படையினரையும், காணி அபகரிப்பு நடவடிக்கைகளையும் தக்க வைக்க முடியும் என சிறீலங்கா அரசு நம்புகின்றது.

**இந்த இரு மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதன் மூலம் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடை முறைப்படுத்த முற்படுவதாக சிறீலங்கா அரசு இந்திய மத்திய அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் நாடகம்மேற்குலகத்தின் அசை வைக் கட்டுப்படுத்தலாம்**

இந்த சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும் எனில் தாயகத்தில் பலமான அரசியல் கூட்டணியும், புலம்பெயர் தேசத்தில் வலுவான தமிழர் அமைப்பும் தேவை என்பதுடன், தமிழகத்தின் நகர்வுகளையும் எம்முடன் ஒருங்கிணைக்க வேண்டும். இல்லையெனில் மேற்குலகம், இந்தியா மற்றும் சிறீலங்கா அரசுகளின் நடவடிக்கைகளின் முன்னால் நாம் மீண்டும் பலவீனமாக்கப்பட்டவர்களாக மாற்றப்படுவோம் என்பதே நிதர்சனம்.

*நன்றி: இது நம்தேசம்*

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# ஈரானியத் தேர்தலும் மத்திய கிழக்கு அரசியலும்



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

சிரியாவின் தொடரும் உள் நாட்டுப் போர், பொங்கும் துருக்கி, குண்டுகள் வெடிக்கும் ஈராக் ஆகியவற்றின் மத்தியில் அணு உலையில் கொதிக்கும் ஈரானில் தேர்தல் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. தேர்தல் முடிவுகள் ஈரானைப் பற்றிய அறிஞர்களை ஆச்சரியப் படுத்தியுள்ளது.

ஈரானியத் தேர்தல் சற்று வித்தியாசமானது. அதன் அதிகாரக் கட்டமைப்பும் சற்று வித்தியாசமானது. ஈரானின் அதிகாரமிக்கவராக அதன் உச்சத் தலைவரான தற்போது கொமெய்னி அயத்துல்லா அலி கொமெய்னி இருக்கிறார். உச்சத்தலைவரை அறிஞர் சபை (Assembly of Experts) தேர்ந்தெடுக்கும். அவரின் கீழ் படைத்துறை அணு ஆராய்ச்சித் துறை உட்பட பல முக்கிய துறைகள் இருக்கின்றன. ஈரானிய அதிபரின் கீழ் இருக்கும் துறைகளில் முக்கியமானது நிதித் துறை. ஈரானில் மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளமன்றமும் இருக்கிறது. அறிஞர் சபை (Assembly of Experts) எட்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் 88 உறுப்பினர்களைக் கொண்டது. உச்சத்தலைவரை இச்சபையால் பதவி நீக்கமும் செய்ய முடியும். செனட் சபை போல் செயற்படும் பாதுகாவலர் சபையும் (Guardian Council) இருக்கிறது. இதன்12 உறுப்பினர்களில் 6 பேர் உச்சத் தலைவராலும் மீதி 6 பேர் பாராளுமன்றத்தாலும் தெரிவு செய்யப்படுவர். ஈரானில் அதிபர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் முதலில் தேர்தல் சபையினதும் பின்னர் பாதுகாவலர் சபையினதும் (Guardian Council) அங்கீகாரம் பெறவேண்டும். பெண்கள் போட்டியிடுதல் மறுக்கப்படுகிறது. இம்முறை தேர்தலில் போட்டியிட 30 பெண்கள் உட்பட 689 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 8 பேர் தெரிவு செய்யப்பட்டு போட்டியிட அனுமதிக்கப்பட்டனர். அயத்துல்லா அலிகமைனிக்கு உகந்தவர்கள் மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனச் சொல்லப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட எட்டு வேட்பாளர்களில் இருவர் போட்டியில் இருந்து விலகிக் கொண்டனர். சென்ற தேர்தலில் தனக்கு வேண்டியவரை வெல்ல வைக்க உச்சத் தலைவர் கொமெய்னி சதி செய்ததாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. இம்முறை கொமெய்னி தனக்கு வேண்டியவர்களை மட்டுமே போட்டியிட அனுமத்திதார் எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால் இம்முறை தேர்தல் நீதியாக நடத்தப்பட்டது.

**ஹசன் ரொஹானியால் பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர முடியும் ஆனால் பொருளாதாரத் தடைக்குக் காரணமான அணுக் குண்டு உற்பத்தியை நோக்கிய ஈரானின் முன்னேற்றத்தை தடுக்க முடியுமா என்பதுதான் இப்போதைய பெரிய கேள்வி.**

தீவிரப் போக்குடையவரும் மேற்கு நாடுகளுக்கு எந்த வித விட்டுக் கொடுப்புக்களையும் செய்யக் கூடாது என்ற கருத்துடையவரும் உச்சத் தலைவருக்கு மிகவும் வேண்டப்பட்டவருமான சயீத் ஜலிலீதான் வெற்றி பெறுவார் என்றும் மிதவாதப் போக்கும் சீர்திருத்தக் கொள்கையும் உடையவரான ஹசன் ரொஹானி (Hassan Rohani) என்ற வேட்பாளரை வெற்றி பெற ஈரானிய மதவாதிகள் அனுமதிக்க மாட்டார்கள் என பல அமெரிக்கா ஆய்வாளர்கள் எதிர்வு கூறி இருந்தனர். இவற்றுக்கெல்லாம் மாறாக பன்னாட்டு இராசதந்திரத்தில் அனுபவம் கொண்டவரான ஹசன் ரொஹானி (Hassan Rohani) அமோகமாக வெற்றி பெற்றுள்ளார்.

ஈரானில் உச்சத்தலைமையை ஆதரிக்கும் பழமைவாதிகள், உச்சத்தலைமையுடன் உடன்பட்டுச் செயற்படும் சீர்திருத்தவாதிகள், உச்சத் தலைமையை மறுக்கும் தாராண்மைவாதிகள் என மூன்று பெரும் பிரிவினர் இருக்கின்றனர். இதில் தாராண்மைவாதிகள் தேர்தலில் போட்டியிடவில்லை. போட்டியிட்டவர்களில் சீர்திருத்தவாதியான ஹசன் ரொஹானி வெற்றி பெற்றுள்ளார். ஆனால் இம்முறை நடந்த தேர்தலின் மூலம் ஈரானிய மக்கள் உச்சத் தலைமைக்கு ஒரு தெளிவான செய்தியை தெரிவித்துள்ளனர். சமூகவிடுதலையும் பொருளாதார மேம்பாடும் அவர்களுக்கு முக்கியமானதாகப் பட்டுள்ளது.

ஹசன் ரொஹானியின் வெற்றி ஈரானிய மக்கள் அணுக்குண்டு தயாரிக்கும் தலைவரிலும் பார்க்க தமது தனிமனித சுதந்திரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பன்னாட்டு உறவையும் மேம்படுத்தக் கூடிய ஒரு தலைவரை விரும்புகின்றனர் என்பதை எடுத்துக் கட்டுகிறது. 64 வயதான ஹசன் ரொஹானி 2003ஆம் ஆண்டிலிருந்து 2005 வரை ஈரானின் அணு வலுத்துறை பேரப்பேச்சுவார்த்தையாளராக இருந்தவர். ஸ்கொட்லாந்துப் பல்கலைக் கழகமொன்றில் கலாநிதிப் பட்டம் பெற்ற ரொஹானி ஈரானின் உச்ச பாதுகாப்புச் சபைச் செயலராகவும் இருந்தவர். தற்போதைய உச்சத் தலைவர் கொமெய்னியுடன் நல்ல உறவைப் பேணுபவர். ஹசன் ரொஹானியால் பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர முடியும் ஆனால் பொருளாதாரத் தடைக்குக் காரணமான அணுக் குண்டு உற்பத்தியை நோக்கிய ஈரானின் முன்னேற்றத்தை தடுக்க முடியுமா என்பதுதான் இப்போதைய பெரிய கேள்வி. அணு உற்பத்தித் துறை உச்சத் தலைவர் கொமெய்னியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

### ◆ சிரியாவில் ஈரானும் அமெரிக்காவும்

சிரியாவில் தலையிடுவதா இல்லையா என்ற முடிவு எடுக்க முடியாமல் இருந்த ஐக்கிய அமெரிக்கா அங்கு தலையிடக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்ட நிலையில் ஈரானில் ஹசன் ரொஹானி வெற்றி பெற்றுள்ளார். சிரியக் கிளர்ச்சியில் நிறையச் சிக்கல்கள் இருக்கின்றன. சிரியத் தேசிய சபை, சுதந்திர சிரியப்படை. ஜபத் அல் நஷ்ரா, இசுலாமிய சகோதரத்துவ அமைப்பு, மதசார்பற்ற மக்களாட்சிக்கான அமைப்பு, டமஸ்கஸ் பிரகடன அமைப்பு, சிரிய மக்களாட்சிக் கட்சி, சிரியப் புரட்சிக்கான உச்ச சபை, சிரிய உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு, மக்களாட்சி மாற்றத்திற்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு, தேசிய மக்களாட்சி அணி, சிரியப்புரட்சிக்கான தேசிய ஆணையகம், சிரிய விடுதலைப்படை, சிரிய இசுலாமிய முன்னணி, சிரியத் தேசிய விடுதலை முன்னணி, விடுதலைக்கும் மாற்றத்துக்குமான முன்னணி........... இப்படி இனும் பல படைக்கலன் ஏந்திய குழுக்களும், மத அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் சிரிய அதிபர் பஷார் அல் அசாத்திற்கு எதிராகச் செயற்படுகின்றன. இவற்றில் சுதந்திர சிரியப்படை ஓர் ஐக்கிய அமெரிக்காவை சார்ந்த அமைப்பாகவும் ஜபத் அல் நஷ்ரா ஓர் அல் கெய்தாவைச் சார்ந்த அமைப்பாகவும் இருக்கின்றன. இதுவே சிரிய விடுதலைக்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருக்கின்றன.

### ◆ ஈரானின் பிராந்திய ஆதிக்கம்

ஈரான் லெபனானின் இயங்கும் ஆப்கானிஸ்த்தானில் இயங்கும் போராளிக் குழுக்களுக்கும் ஜப்பானில் இயங்கும் செம்படை, அமெரிக்காவில் இயங்கும் இரகசியப்படை, குர்திஷ் போராளிக் குழுக்கள், சூடானில் இயங்கும் இசுலாமியப் போராளிக்குழுக்கள் போன்ற பல போராளிக் குழுக்களுக்கு ஆதரவு வழங்குகிறது. ஈரான் உதவி வழங்கும் ஹமாஸ் இயக்கம் சிரிய உள்நாட்டுப் போரில் கிளர்ச்சிக்காரர்களை ஆதரித்ததால் ஈனானுக்கும் காசா மேற்குக் கரையில் இயங்கும் ஹமாஸ் இயக்கத்திற்கும் இடையில் உறவு பாதிப்படைந்துள்ளது. சியா முசுலிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஈரான் சவுதி கட்டார் போன்ற சுனி முசுலிம்களை அதிகமாகக் கொண்ட நாடுகளுடன் நல்ல உறவில் இல்லை. சுனி முசுலிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டாலும் (74விழுக்காடு) சியா முசுலிம்களின் ஒரு பிரிவு இனக்குழுமமான அலவைற்றினரின் ஆட்சியின் கீழ் சிரியா இருக்கிறது.

**புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஸன் ரொஹானி சிரியா தொடர்பாக வெளியிட்ட முதல் அறிக்கையில் சிரியக்கிளர்ச்சிக் காரர்களைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டதும் சிரியாவில் வெளிநாட்டுத் தலையீடு இருக்கக் கூடாது என்பதும் மேற்கு நாடுகளுக்கு சாதகமான ஒன்றல்ல.**

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஸன் ரொஹானி சிரியா தொடர்பாக வெளியிட்ட முதல் அறிக்கையில் சிரியக்கிளர்ச்சிக் காரர்களைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டதும் சிரியாவில் வெளிநாட்டுத் தலையீடு இருக்கக் கூடாது என்பதும் மேற்கு நாடுகளுக்கு சாதகமான ஒன்றல்ல. தனது ஒரே ஒரு நட்பு நாடான சிரியாவின் அதிபர் பஷார் அல் அசாத்தின் ஆட்சிக்கு ஈரான் பேருதவி செய்து வருகிறது.

ஈரான் தனது படையினர் 4000 பேரை சிரியாவிற்கு அனுப்பும் என அறிவித்ததும் பஷார் அல் அசாத்தின் படைகள் அலேப்பே நகரைச் சிரியக் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து மீளக் கைப்பற்றுவதை அனுமதிக்க முடியாது என துருக்கி அறிவித்ததும் கட்டார் நாட்டின் நிதி உதவியில் தங்கியிருக்கும் எகிப்த்து சிரியாவுடன் தனது உறவை முறித்துக் கொள்வதாக அறிவித்ததும் சிரியாவில் ஒரு விமானப்பறப்பு தடைசெய்யப்பட்ட பிராந்தியத்தை உருவாக்குதை அமெரிக்கா கருதுவதும் மத்திய கிழக்கில் பெரும் படை மோதலை உருவாக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON
020 8216 2520
MR. BRIAN

CROYDON
020 8150 9950
MR SIVA RANJAN

CAMBRIDGESHIRE
01354 707 911
MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email:
admin@bbkca.com

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

# The 13th Amendment: What Next?



By Tisaranee Gunasekara

*"When you have prayed for victory you have prayed for many unmentioned results which follow victory–*must* follow it, cannot help but follow it".- Mark Twain (The War Prayer)*

The Rajapaksas lost the Round I of the anti-devolution battle.

For the Siblings losing has become an unaccustomed experience. They have won almost all the major political battles they unleashed since 2009. Perhaps the only significant exception was the attempt to introduce a fraudulent private sector pension plan. It took the united effort of the country's private sector employees, and one young life, to beat back that Rajapaksa plan to buttress their tottering finances by robbing private sector workers.

Since then, the Rajapaksas have grown stronger and the opposition weaker. Post-impeachment, the upper judiciary has become nothing more than a Rajapaksa muppet-show. Given this devastating disparity in the actual balance of forces, defeating the incessant Rajapaksa power-and-money-grabs has become harder than ever.

The Siblings would have been able to win the Round I of the anti-devolution battle with ease, had the balance of forces not undergone a dramatic change, momentarily, due to the activation of an external factor:India.

Indians were predictably outraged by the latest Rajapaksa attempt to disembowel the 13th Amendment. According to DBS Jeyraj, an enraged Indian official had asked, "Does President Mahinda and Prof. GL think we in New Delhi are blithering idiots who can't see through their hocus pocus"

The answer to that is, 'yes'; the Rajapaksas think that everyone can be fooled some of the time and many can be fooled all the time.

A still unfolding issue is indicative of this Rajapaksa modus operandi. The Uthuyan newspaper reported about a planned attempt by Gotabhaya Rajapaksa to shift the almost-two-centuries-old Sri Poomari Amman Kovil from its present location near the Temple Trees, to create a new car park for the visitors to the Presidential abode. Dripping with righteous indignation, the Director General of Media Centre for National Security refuted the story: "…Defence Secretary Gotabhaya Rajapaksa has distinguished himself by his dauntless bravery…. The emergence of Colombo as a beautiful garden city is a result of the Metro Colombo Urban Development Project which is a concept of the Defence Secretary…. the Uthayan newspaper is just a spurious publication that is of no value to anyone. Therefore, the concocted news items that it publishes does not carry any merit. It is a newspaper that tries to disrupt peace and harmony in the country".

It all sounded so sincere, so truthful, so absolutely heartfelt.

Today, Sri Lanka Mirror reported that the Kovil will be shifted and that the administrators of the Kovil have been given time till June 20th complete the task[iii]. (Little wonder Gotabhaya Rajapaksa called websites/ social media a major threat to 'national security'. Once the 'Media Ethics Act' is in, that 'enemy' can be obliterated, legally).

The Rajapaksas are maestros of evasion. Their ability to slither out of a tight corner will put an eel to shame. When confronted with strong resistance, they make a feint of retreating, without conceding any real ground. Once resistance has been disarmed by lies/false promises, they return with lightening speed, without giving their distracted opponents the time to rearm.

That was how the game-changing 18th Amendment was won.

The Round II of the anti-devolution battle will commence soon.

Will the Rajapaksas use their usual carrot-and-stick method to propel the SLMC and the UPFA left parties back to their original and customary non-vertebrate position? Or will they use their puppet Chief Justice to postpone the Northern provincial election via a judicial order? If the election is postponed by the Supreme Court, then the Rajapaksas can claim that they are merely abiding by the judiciary's decision and being respectful of the rule of law. For the Rajapaksas, the Indian factor will lose most of its import once the HambantotaCommonwealthis concluded. Post-Commonwealth, the Rajapaksas can use the Chinese card to confound Indiaand complete the task of unravelling the 13th Amendment.

## Undermining Sri Lanka

Under Rajapaksa rule, the necessary demarcation lines between state, government and the ruling group have been effaced. This was no accident; it was done deliberately, to facilitate the transformation of Sri Lanka from a flawed democracy to a familial oligarchy.

An inevitable – and expected – outcome of this process is the equation of national interests with the political interests of the Ruling Family. This way the power agenda of the Ruling Family can be promoted under the banner of nationalism/patriotism while opponents of the Ruling Family can be labelled and punished as traitors.

Thus the disembowelling the 13th Amendment, which is solely in Rajapaksa interests, is being depicted as an urgent national-security need.

The Siblings do not believe in the existence of an ethnic problem. According to the Rajapaksa narrative, the Original Sin in the Lankan story is the de-prioritisation of national security, post-Independence, and the concomitant neglect of the military – as Gotabhaya Rajapaksa opined in his recent speech at the Kotelawala Defence Academy. According to this flat-earthist worldview, the JVP insurgencies and the Eelam Wars were caused by the inadequacy of military muscle and weakness of intelligence-gathering capacity.

This simplistic, one-dimensional reading of history leaves out all major politico-psychological and socio-economic causes of Sri Lanka's wars and upheavals. According to this kindergarten rendition of history, Sinhala Only and Standardisation made no contribution to the birth of the Eelam War; and the Black July's sole relevance is the creation of a Tamil Diaspora. The complex pre-history of the war is thus reduced to a tale of 'disobedient Tamils', 'interferingIndia' and 'deceptive international NGOs'.

Since there is no ethnic problem, devolution is unnecessary and the 13th Amendment a 'Trojan Horse' of Indian making which must be dismantled at the earliest possible opportunity.

Gotabhaya Rajapaksa thinks that the BBS and other organisational expressions of Sinhala-Buddhist supremacism are a reaction to minority extremism: "The increasing insularity and cohesion amongst minority ethnic groups has also led to the emergence of hardline groups from the majority community; the popularity of certain political groups and movements can be viewed as being largely a response to this trend[iv]. Clearly the Rajapaksas belong to that category of Sinhalese who believe that Black July was an unfortunate but understandable response to the killing of 13 soldiers.

How can such a ruling clan be capable of comprehending the lethal consequences of disembowelling the 13th Amendment?

Indian official had asked, "Does President Mahinda and Prof. GL think we in New Delhi are blithering idiots who can't see through their hocus pocus"

Defeating the LTTE did not create a united Lankan nation. Sri Lanka today is what she was after 1956: one and indivisible, with marginalised minorities and seeds of separation germinating underground.

Many an ordinary Tamil would think that had Vellupillai Pirapaharan been alive and the LTTE remained a potent politico-military force, the Sinhala establishment would not have dared to disembowel the 13th Amendment. Sadly and unfortunately, they would be right.

Maximalism is a mindset, a way of looking at the world and living in it. It is a habit that dulls the eyes, stops the ears, blunts the intellect and silences the conscience. It is a habit which makes one do not only what is wrong but also what is counterproductive.

Many an ordinary Tamil would think that had Vellupillai Pirapaharan been alive and the LTTE remained a potent politico-military force, the Sinhala establishment would not have dared to disembowel the 13th Amendment Sadly and unfortunately, they would be right.

*Courtesy: Colombo Telegraph*



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# British Tamils Forum rejects 'any political solution based on 13A'




In a statement released on 16th June, the British Tamils Forum said that Tamils rejected "any political solution based on the 13th Amendment" and had "consistently rejected by the Tamil people and political leadership at several democratic stages, in the past and at present, ever since this bilateral agreement was signed between India and Sri Lanka."

The 13th Amendment to the constitution, entrenched in the unitary state-centric model, cannot address the legitimate aspirations of the Tamil speaking people in Sri Lanka.

This amendment to the constitution is not in any way a starting point, an interim or a final solution to the conflict and it prevents any lasting negotiated settlement, reached with the support of the International Community. The British Tamils Forum strongly denounces any efforts to impose this unsupported and failed political response, which was reached for the benefit and interest of two countries – India and Sri Lanka – without consulting the Tamil Nation.

The 13th Amendment has several flaws: executive power will be exercised by a Provincial Governor appointed by the President; public services in the province will be controlled by the Governor; the President has the power to dissolve the Provincial Council; the Governor is not duty bound to the advice or instructions of the Chief Minister; the executive power of the Governor is subject to the control of the President; the Provincial Council cannot access the Provincial Fund without the sanction of the Governor; power over the police and public order is retained by the President; and the Disposition of State Land is also in the hands of the President; among many others.

Due to these flaws and inadequate provisions, it has been consistently rejected by the Tamil people and political leadership at several democratic stages, in the past and at present, ever since this bilateral agreement was signed between India and Sri Lanka.

The genocidal actions – pogroms, massacres, colonisation, land dispossession – committed by the Sri Lankan state in the Tamil homelands even under the current provincial council system foreshadow the realities of life following the 13th amendment.

All those who seek a genuine solution to the Tamil question must remain vigilant against falling into the traps that have been set by the Sri Lankan state and certain external forces to impose the 13th Amendment or a watered-down version of 13th Amendment upon the Tamils.

The Sri Lankan state, through its hard-line allies and ultra nationalist forces, has initiated a political campaign encouraging hard-line views and xenophobic sentiments on the 13th Amendment, with a view to diluting the amendment even further to its interest, before thrusting it upon the Tamils. This is clearly visible to observers of contemporary southern politics.

In the contrast, certain external actors who aspire to play the role of 'saviour' in the Tamil-Sinhalese political arena are pushing for implementation of the 13th Amendment in its entirety, in the pretext of rescuing the Tamils in Sri Lanka.

On these grounds, the British Tamils Forum stands in solidarity with our people in our Tamil Homeland and state that any political initiatives grounded in the 13th Amendment cannot be feasible and will not create an enduring peace in Sri Lanka.

> On these grounds, the British Tamils Forum stands in solidarity with our people in our Tamil Homeland

The British Tamils Forum insists that any political solution to the Tamil National Question has to be conducted through an internationally mediated referendum – only this can lay the foundation for a lasting peace and satisfy the socio-political and economic aspirations of the Tamils in the island of Sri Lanka.

## British Trade Unions Support Tamils' Right to Self-determination

The Solidarity Day organised by the British Tamils Forum and an activist group called Tamil Solidarity jointly organised a 'Solidarity Day'. It brought together people from the Tamil community with representatives of the trade unions, the student movement and a number of other campaigns.

Participants denounced the decision to go ahead with the Commonwealth Heads of Government Meeting in Sri Lanka in November, demanding that the decision to send Prime Minister David Cameron and Prince Charles to that meeting is reversed.

Hugo Pierre, Unison activist and convenor in Camden schools, spoke of his visits in the past to Sri Lanka when it was clear from discussion with workers in the south and in the tea plantations that the Bandaranaike was preparing the state machinery for further reprisals against the Tamils.

Unions organise over six million working people in Britain. Not only do they campaign for their members' interests in the workplace, and against attacks on the education, health and other public services, they also have a long history of campaign against injustice internationally.

Chris Baugh is the assistant general secretary of the Public and Commercial Services union (PCS), one of the most radical and active unions in Britain, said that 'solidarity' was not just a nice idea but a most powerful weapon in the fight against the international neoliberal consensus that sees the likes of Cameron collaborating with the war criminal Rajapaksa.

Martin Powell-Davies, member of the national executive of the biggest teachers union, the NUT, said that if Tamils and trade unionists work together, building awareness of the struggle of Tamils and building the trade unions as fighting bodies against all repression, Cameron will live to regret his participation in the CHOGM meeting.






# KIDS பேப்பர்

## Quotable Quotes

"People try new things all the time. By now, the people who succeed have to be very sophisticated"

" People always say congratulations. When you're a successful bidder it means you're willing to spend more money than anyone else. I'm not sure if that's congratulations or condolences."

"You never achieve success unless you like what you are doing."

" Behind every successful man there's a lot of unsuccessful years."

## தேவனின் பணப்பை

தேவன் ஒரு செல்வந்தன். நல்ல செயல்கள் ஒன்றுமே தெரியாது. பணத்தின் மேல் ஆசையுள்ளவன். தான் மட்டுமே செல்வந்தனாக இருக்க விரும்புவான். வியாபார நோக்கமாக வெளியிடத்திற்குச் சென்றான். அங்கு அவனது பணப்பையைத் தொலைத்து விட்டான். தனது பணப்பையை எடுத்துத் தருபவர்களுக்கு ஆயிரம் ரூபா தருவதாக அறிவித்தான்.

நேர்மையான சிவன் இந்தப் பணப்பையைக் கண்டெடுத்தான். பணப்பையையும் கொண்டு செல்வந்தன் வீட்டிற்குச் சென்று பணப்பையைக் கொடுத்தான். செல்வந்தன் தேவனுக்குச் சொன்னபடி பணம் கொடுக்க விரும்பவில்லை. தந்திரமாக தனது பணப்பையைத் திறந்து பார்த்துவிட்டு எனது பையில் பத்தாயிரம் ரூபா இருந்தது. இப்போது 9000 ரூபாயும் ஒரு மணியும் தான் இருக்கிறது. எனவே மணியையும் மீதிப் பணத்தையும் கொண்டு வா எனச் சிவனை விரட்டி அனுப்பினான். தேவன் தன்னைக் கள்வன் என்று விரட்டியடித்தது சிவனுக்கு மனதை வருத்தியது. நீதிபதியிடம் சென்றான்.

நீதிபதி செல்வந்தன் தேவனையும் சிவனையும் அழைத்து விசாரித்தார். விசாரணை நடைபெற்றது. நீதிபதி நேர்மையானவர் அறிவுடையவர் செல்வந்தனின் கபட நாடகத்தைப் புரிந்துகொண்டு நீதிபதி தேவன் இது உனது பணப்பையல்ல. உனது மணியும் இல்லை. பணமும் குறைவாகவுள்ளது.

அதனால் உனது பணப்பையில்லை. எனவே இதை சிவனிடம் கொடுக்கிறேன். உனது பணப்பையை நீ தேடி எடு என்று கூறித் தீர்ப்பை வழங்கினார். செல்வந்தன் மனம் கலங்கி நீதிபதியிடம் மன்னிப்புக் கோரினான்.

நீதிபதியும் மனம் திருந்திய செல்வந்தனை மன்னித்து அவனுடைய பணப்பையை அவனிடம் கொடுத்தார். நேர்மையான சிவனுக்கு அவனுக்குரிய ஆயிரத்தையும் தனது பணத்திலிருந்து பண முடிச்சும் கொடுத்து அனுப்பினார். *'நேர்மை எப்பொழுதும் மனிதனை உயர்த்தும்' நேர்மை தவறேல்*

## Word Search



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| C | V | C | A | G | G | K | K | Y | N |
| Y | I | I | J | M | U | U | N | N | E |
| Y | W | R | E | M | L | O | N | N | S |
| L | J | T | A | A | I | K | A | I | A |
| F | E | R | N | O | I | V | R | P | T |
| B | A | T | X | L | A | U | F | W | B |
| N | H | E | A | L | V | H | C | V | S |
| A | V | V | I | A | R | M | Q | S | Y |
| Z | I | K | N | I | M | U | R | I | S |
| T | E | K | U | M | A | R | I | K | D |

Words: KULANTHA, KILAVAN, KILAVI, KUMARAN, SIRUVAN, SIRUMI, KUMARI

நீ தனிமையில் இருக்கும்போது உனக்கு என்ன என்ன தோன்றுகிறதோ அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

---

வெற்றி என்பது நிரந்தரமல்ல தோல்வி என்பது இறுதியானதுமல்ல !

---

ஒரு நொடி துணிந்தால் இறந்துவிடலாம்.

ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்து விடலாம்.

--

நூறு வார்த்தைகள் வலியை ஏற்படுத்தா? ஆனால், ஒரு நல்ல நண்பனின் மவுனம் இதயத்தில் அதிகக் கண்ணீரை ஏற்படுத்தும்.

--

நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன் ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது. - பில் கேட்ஸ்

## The Two Friends

Two friends, Hemant and Vikas, planned to go hiking in the woods. They packed their knapsacks, lugged them over their shoulders and started out.

One evening, while walking through the dense forest, they heard a bear growl. They were very scared and started to run away, but "Twick, twick", they could hear the twigs breaking with each step the bear took towards them.

Desperate, Hemant saw a low branch hanging from a tree. He quickly caught hold of the life-saving branch and climbed on top of the tree as soon as possible. He was so scared that he did not even look at his friend once.

Vikas, who was behind the first, was not so lucky. The bear was right behind him and when he saw Hemant save himself, all he could think of doing was to was to throw himself flat on the ground.

And that's how the bear found him. Face down on the ground and not even daring to breathe. The bear



put his nose close to Vikas' ear - and then he sniffed and sniffed and sniffed. He was trying to make out whether Vikas was just pretending or if he was dead.

Then finally he stopped sniffing. Vikas dared to take small breath. Then the bear growled, and Vikas' blood ran cold.

But by then the bear had decided that Vikas was not alive and it is well-known that bears will not touch dead meat. So the bear slouched off into the forest.

Seeing that the worst of the danger was over, Hemant slowly climbed down the tree where he was hiding. Walking up to Vikas, who was still so shaken up that he could hardly stand, Hemant he laughingly asked, "Hey, what did Master Bear whisper to you?"

Vikas gave Hemant a long steady look. "He told me," said Vikas very slowly, "never to trust a friend who deserts you at the first opportunity he gets. So, if you'll excuse me..." Saying that, Vikas picked himself up, brushed off the dust, and walked away.

## Colouring - 196



### Dear Kids...



Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Gift Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

**Visit our Web: www.facebook.com/ orupaper**



### Issue 195 Winner Jacinta



Mary, 8 Yrs



Roshini



Jucinta, 5 Yrs



Rehashan Asokan



Narthana-J, 7 Yrs

சிறுவர்களே! நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படங்களுடன் உங்கள் பெயரையும் முகவரியையும் அனுப்ப மறக்காதீர்கள். இந்த வாரம் அனுப்பிய அனைத்து சிறுவர்களும் தமது முகவரியை குறிப்பிட மறந்து விட்டார்கள்.

## Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் www.bbc.co.uk/cbbc என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பார்ப்பமேன். இத்தளம் Online Game, Music, Stories, worksheet, news சிறுவர் கதைகள் என சிறுவர்களுக்கு பிடித்த பல பயனுள்ள தகவல்களை கொண்டமைந்துள்ளது இந்தத் தளம். வாங்க குட்டீஸ் பழகலாம் .....

**Web Address : www.bbc.co.uk/cbbc**


We are now @ TESCO
Do you know you can buy your
favourite Srilankan Brands Now @ TESCO
Promotions NOW ON !
Store Location
• Wembley Extra, Neasden, NW10 0TL
• Gallions Reach Extra, Beckton, London, E67FB
• Cheshunt Extra, Cheshnut, Waltham Cross, EN8 0TA
• Horwich Extra, Horwich, Bolton, BL6 6JS
• Leicster Hamilton Extra, Hamilton, Leicester, LE5 1BJ
• Stockton Extra, Stockton-on-tees, TS21 3LU
• Reading Extra, Reading, RG1 8DF
• Surrey Quays Extra, Rotherhithe, London, SE167LL
• Bradford Extra, Bradford, BD7 4EY
• Slough Wellington Extra, Wellington Street, Slough, SL1 1XW
• Dudley Extra, Birmingham Road, Dudley, DY1 4RP
• Newport Spytty Extra, Newport, Wales, NP194TX
• Yardleym, Coventry road, Yardley, Birmingham, B26 1AD
• Smethwick, Warley, B67 7RA
• Feltham Dukes Green, Feltham, TW14 0LH
• Hoover Building, Greenford, UB6 8DW
• Harrow 2, HA1 2TU
• Leyton, E10 7AA
• South Tottenham, N15 4AJ
• Cheetham Hill, Cheetham Hill-Off bury, Manchester, M8 5DP
MD
Maliban
Inspired by goodness...
LARICH
HARISCHANDRA MILLS PLC
LION LAGER
LION STOUT
Ceylon Fish
A product of Universal
Little Lion
USL
UNIVERSAL SUPPLIERS LIMITED
Producing Opportunity, Releasing Quality, Achieving Proficiency
Access Business Centre, Unit 1000, First Way, Wembley, HA9 0JD, London, Tel: 0208 7955 224


King Crafts
இயற்கையோடு ஒட்டி உறவாடி தொன்று தொட்டு உள்ள கைவினைப்
பொருள்களான வாலாஜா பிரம்பு நாற்காலிகள், ஊஞ்சல்,
அலங்கார தட்டுகள், சோபா செட்டுகள் மற்றும் பல
சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உபயோகிப்பீர் பாக்குமட்டை தட்டுகள் மற்றும்
வண்ண வண்ண காகிதப் பை. அழகு மங்கையரின் தேவைகளை பாதுகாப்பாக மற்றும் ஸ்டைலாக
கொண்டு செல்ல தேர்ந்தெடுப்பீர் தோலினால் தயாரிக்கப்பட்ட வேனிட்டி பேக், டிராவல் பேக் மற்றும் பல.
நியாயமான விலையில் வாங்கிட மற்றும் உங்கள்
கைவினைப் பொருட்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய
நாடுங்கள்
King Crafts
மேலதிக விபரங்களுக்கு
020 7183 0367

# £40 FREE*

## LYCAMOBILE TOP-UP FOR YOUR SriLankan Airlines TICKETS

* Offer valid until 30th June 13. Minimum two Sri Lankan Airlines, adult return tickets to be purchased together. £40 will be given as £20 Lycamobile top-up per person limited to maximum of two top-ups per booking.

LycaFly
Travel the world for less

# SUMMER SALE



SriLankan Airlines

SRI LANKAN AIRLINES
# COLOMBO
from **£507** including taxes

Direct flights from **Heathrow**
30kg Baggage

## SUMMER SALE

**Next time you book your flights to Colombo why not…**



Extend your holiday to
### Singapore ★★★★
from ~~£175~~ **£165** per person
3 days, twin sharing
Incl breakfast. Excl flights
At **Peninsula Excelsior**



Extend your holiday to
### Kuala Lumpur ★★★★★
from ~~£130~~ **£120** per person
3 days, twin sharing
Incl breakfast. Excl flights
At **Istana Kuala Lumpur**

## WORLDWIDE HOLIDAYS AND TOURS



Package tour
### Sri Lanka
from ~~£450~~ **£435** per person
6 days, twin sharing
Incl breakfast, transfers & tour. Exclude flights



Accommodation
### Dubai ★★★★
from ~~£142~~ **£132** per person
4 days, twin sharing
Inclusive breakfast
Exclude flights

| Flights to INDIA / FAR EAST | | Including Taxes |
|---|---|---|
| CHENNAI | | from £440 |
| MUMBAI | | from £438 |
| KUALA LUMPUR | | from £473 |
| SINGAPORE | | from £480 |
| BANGKOK | | from £488 |

| Flights to US/CANADA | | Including Taxes |
|---|---|---|
| NEW YORK | DIRECT | from £481 |
| MIAMI | | from £492 |
| BOSTON | | from £496 |
| TORONTO | DIRECT | from £506 |
| ORLANDO | DIRECT | from £511 |

| Flights to AUSTRALIA/NZ | | Including Taxes |
|---|---|---|
| PERTH | | from £734 |
| ADELAIDE | | from £738 |
| BRISBANE | | from £751 |

**Scan the code**
**Visit Lycafly.com**
**Call 020 7536 6575**

**14 Ealing Road**
**Wembley HA0 4TL**
**United Kingdom**

*£20 Lycamobile credit is not exchangeable, transferrable or redeemable for cash or other credit. For full terms and conditions and eligibility, please visit Lycafly.com or call us on 020 7536 6575. Fares subject to availability and conditions apply.

IATA

## ஆர்ப்பாட்ட நிகழ்வுகள் - Cardiff










## தோழர் ஐ.பி.ரி.வரதன் நினைவில்..



எண்பதுகளில் கொழும்பில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி என ஊடகங்களில் தெரிவிக்கப்பட்ட பெயர் ஐ.பி.ரி வரதன். அப்போதைய சிறிலங்கா அரசாங்கம் அவரது தலைக்கு ஒரு லட்சம் ரூபா விலைபேசியிருந்தது. அவர் வேறு யாருமல்ல, மே இருபதாம் திகதி பிரான்சில் காலமான தோழர் சிதம்பரப்பிள்ளை வரதராசா. ஈரோஸ் என்ற ஈழப்புரட்சி அமைப்பின் மத்திய குழு உறுப்பினராக இருந்த அவர் 1990 இல் அவ்வியக்கம் கலைக்கப்படும் வரை அதன் இராணுவப்பிரிவின் தளபதிகளில் ஒருவராக இருந்தார்.

கட்டுபெத்த பல்கலைக்கழகத்தில் தனது கல்வியை முடித்து,ஈரோஸ் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொள்ளும் வரையான காலப்பகுதியில், தொலைத்தொடர்பு அதிகாரியாகப் (Inspector of Posts and Telecommunications) பணியாற்றினார். இதுவே பின்னாளில் அவரை IPT வரதன் என அழைப்பதற்கு காரணமாக இருந்தது.

ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட்டதன் பின்னர், வன்னியில் வாழ்ந்து வந்த அவர் 2007 இல் புலம்பெயரும்வரை,அம்பலவன்பொக்கணையில் கிராம சேவையாளராகக் கடமையாற்றினார். இந்நாட்களில் தனது தொழிநுட்ப அறிவினையும் போராட்ட அனுபவங்களையும் விடுதலைப்புலிகளுடன் பகிர்ந்து கொண்டதாகத் தெரியவருகிறது.

தோழர் வரதன் ஒரு இராணுவத்தளபதிக்குரிய உடல்வாகைக் கொண்டவர் அல்ல, மெல்லிய தோற்றத்தைகொண்டவர். இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னரான சமாதானகாலத்தில், இவரைச் சந்திக்க விரும்பிய சிறிலங்கா இராணுவத்தளபதி டென்சில் கொப்பேக்கடுவ, அவரது தோற்றத்தைக் கண்டு ஆச்சரியமடைந்ததாக அவரது தோழர் ஒருவர் குறிப்பிட்டார். கொழும்பில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல்களை இந்த மெல்லிய மனிதர் வழிநடாத்தினார் என்பதே கொப்பேக்கடுவவின் ஆச்சரியத்துக்கு காரணமாக இருந்தது.

தோழர் வரதன் அவரது மனைவி மரிய மோட்ச சலாகினி, பிள்ளைகள் சுபவரதன்,சுபதர்ஷா, சுபமகிஷா ஆகியோரை மட்டுமல்லது எண்ணற்ற அவரது நண்பர்களையும் விட்டுப்பிரிந்துவிட்டார். அவரது இறுதிச் சடங்கு யூன் 17ம் திகதி லண்டனில் நடைபெற்றது.

தாயகத்தை நேசித்த தோழர் வரதனுக்கு ஒரு பேப்பர் தனது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.


Most Trusted and Reliable Name in the Trade Since 1985



Collection from £ 10 within London

Glen Carriers
Laksiri Seva
(Glen Carriers Forwarding Limited)

Services We Offer;

- இலங்கை மற்றும் உலகத்தின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
  - தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
    - பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வீட்டுக்கு வீடு சேவை

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Worldwide Courier Services
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with FREE Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள்
Laksri Seva Customs Bonded Warehouses

| Colombo Warehouse | Eastern Province Warehouse |
|---|---|
| Laksiri Seva Pvt Ltd.<br>66, New Nuge Road,<br>Peliyagoda, Colombo<br>+94 1129 177 29-31 | Laksiri Seva Pvt Ltd.<br>26, Hmyl Lane, Main Street,<br>Addappallam, Ninthavur.<br>T: 0672 0510 50-51 |

Collection from your door point in any part of UK or Europe
Conditions Apply

2 x Tea Carton for £ 19.50 Only..

அழையுங்கள் : 020 8743 7353

Mon - Sat : 9:30am to 5:30pm
Sun: With prior appointment only

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

# வரலாறு காத்துக் கொண்டிருக்கிறது



**ச.ச.முத்து**

சிங்களத்தின் மனோநிலை என்பது எத்தகையது என்பதை நேற்றைய லண்டன் மைதான முன்றலில் பார்க்க கேட்க நேர்ந்தது. இது ஒன்று ஆச்சர்யமானதோ அதிர்ச்சியானதோ அல்ல. பேரினவாத மனப்பான்மை என்பது இப்படி நடக்காது விட்டால்தான் ஆச்சர்யம். அதிர்ச்சி. எல்லாமே.

ஆனாலும் அவர்களுக்கு ஒருவிதத்தில் நன்றி சொல்லவும் வேண்டும். நாம் எங்கு நிற்கின்றோம். என்பதை எமக்கு வெகுவாக மிகவும் ஆணித்தரமாக புரிய வைத்ததற்காக. அவர்கள்தான் அடிக்கடி எமக்கு நினைவு படுத்திக் கொண்டே இருந்தாலும் நாமும்தான் அதனை உடனேயே கொந்தளித்து பின் மறந்து படுத்து கிடக்கின்றோம்.

**நாம் போராடாமல் உறங்கி கிடந்தால் காலச்சிலந்தி கூட நம்மீது வலைபின்னி போய்விடும். மூச்சுவிட மறந்தால் வரலாற்று கல்லறைக்குள் தமிழினம் புதைக்கப்பட்டுவிடும்**

நேற்றைய லண்டனில் தமிழர்கள் தாக்கப்பட்டதற்கான காரணம் எதுவாக இருந்தாலும் அதனில் மிகமிக முக்கியமான காரணம் அந்த போராட்டத்துக்கு அதிக அளவிலான தமிழ் மக்கள் போகாமல் விட்டதே என்பதே ஆகும். முன்னிலும் மிக வேகமாக இனச்சுத்திகரிப்பும், நிலஆக்கிரமிப்பும், படுகொலைகளும், மோசமாக தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. தமிழினம் தொடர்ந்து முன்பைவிட மிக ஆக்ரோசமாக திரளாக போராடியே தீர வேண்டிய வரலாற்று கட்டாயம் எம் மீது இருக்கின்றது.

ஆயினும் வர வர போராட்டத்துக்கு மக்கள் குறைந்து கொண்டே போவதற்கு எமக்குள் உள்ள முரண்பாடுகள் முக்கிய காரணியாக இருந்தாலும் அதனைவிட மிகமுக்கியமான உளவியல் தாக்கமாக இன்னும் ஒன்று இருக்கின்றது. இது மிகமிக முக்கியமானது. உரிமைகள் அனைத்தும் இழந்து, இந்த நூற்றாண்டின் மிக மோசமான இன அழிப்புக்கு உள்ளான ஒரு மக்கள் இனமாகிய நாம் போராடுவதால், அதிலும் ஒன்றிணைந்து, தொடர்ந்து தளாவின்றி போராடுவதால் மட்டுமே எமது உரிமைகளை பெறமுடியும் என்பதே யதார்த்தம்.

உலகம் முழுதும் விடுதலைக்காக போராடிய மக்களின் வரலாறும் போராடிக் கொண்டிருக்கின்ற மக்களின் நிகழ்காலமும் எமக்கு அழுத்தமாக சொல்லி நிற்கும் பாடமும் இதுதான். எமது மண்ணில் மானுடம் காணாத அற்புதமான அர்ப்பணிப்புகளையும், ஈகங்களையும், வீரத்தையும் நிகழ்த்திய போராளிகள், மாவீரர்கள் கற்றுத் தந்திருக்கும் பாடமும் இதுதான்.

எந்தவொரு சிங்கள மனிதனாலும் எந்தக் காலத்திலும் அழித்தெறிந்துவிட முடியாத எமது மாவீரர்கள் ஒவ்வொருவரினதும் உறுதி நிறைந்த சரித்திரங்கள் ஒவ்வொன்றும் எமக்கு தினமும் சொல்லி தந்து கொண்டிருக்கும் வழி காட்டுதல் இதுவேதான்.

இவை எல்லாவற்றையும்விட உறுதியுடன் தொடர்ந்து போரடினால் மட்டுமே சிங்களத்துக்கு புரியும் என்று சொல்லிவைத்த அந்த அதிமானுடன் தேசியதலைவரின் வரலாறு எவ்வளவு அழகாகவும் ஆழமாகவும் போராட்டத்தின் தேவையை சொல்லி சொல்லி இருக்கிறது. அது எத்தகைய போராட்டமாகவும் இருக்கலாம். எமது நிலைமைகளுக்கேற்ப, வாழும் சூழலுக்கேற்ப, எதிரியின் நகர்வுகளுக்கேற்ப, எமது போராட்ட வடிவங்கங்களை வேண்டுமானால் மாற்றலாம். ஆனால் போரடிக்கொண்டே இருந்தாக வேண்டுமல்லவா..?

இந்த போராட்ட சிந்தனை மீது எதிரியும், எதிரிக்கு எம்மீது இன அழிப்பை நிகழ்த்துவதற்கு துணைநின்ற சக்திகளும் தடுமாற்றங்களை ஏற்படுத்துவதில் ஒரு பெரிய வெற்றியினை கடந்த நான்கு வருடங்களில் அடைந்திருக்கிறார்கள் என்பதே வருத்தமான உண்மை ஆகும்.

எல்லோரும் சும்மா இருங்கள். சர்வதேசம் எமக்கு எல்லாம் பெற்றுத்தரும். தடித்த புத்தகங்களில் உறங்கிக் கிடக்கும் மனித உரிமை சட்டங்களின் சில கோவைகளை வகைப்படுத்தியாரோ ஏதோ ஒரு தீர்மானத்தை எமக்காக நிறைவேற்றுவார்கள். அல்லது, 13ம் திருத்தமோ அதற்கு மேலோ இல்லை மிக கீழோ ஒரு தீர்வை பாரதமாதா பெற்று தரும்.

சீனாவுடன் சிங்களம் நெருங்க நெருங்க சர்வதேசம் எமது உரிமைகளையோ, அல்லது சிங்களத்தின் மீதான இன அழிப்பு குற்றச்சாட்டையோ தீவிரமாக்கும். அதன் மூலமாக எமக்கு ஏதேனும் கிடைக்கும். அதுவும் இல்லை என்றால் சிங்களதேசத்தில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ராஜாதிராஜ மகிந்தரின் சிம்மாசனத்தில் யாரோ ஒரு புஞ்சிபண்டாவோ, வீரவன்சவோ உட்கார்ந்து விட்டால் எமது நூற்றாண்டுத் துன்பமும் ஓடி ஒழிந்து நாம் விலங்குகள் அறுபட்ட மனித இனமாகி விடுவொம் என்ற கருத்துகள் இடைவெளியின்றி தொடர்ந்து எமது மக்கள் மனங்களுக்குள் புகுத்தப்பட்டு வந்துகொண்டிருந்ததன் பலன்தான் போராட்டத்திலும் போராடுவதன் தேவை மீதான அவசியத்திலும் மக்களுக்கு ஆர்வம் குறைந்து மந்தமாகியதன் காரணம்.

மிகநீண்ட பலநூறு ஆண்டுகளாக காலனி ஆட்சிக்குள் அடிமைப்பட்டு அடிமைத்தனத்தின் அனைத்தையும் கவர்ச்சிகரமானதாகவும், இன்பமாகவும் கருதி இருந்த இந்த மக்கள் திரள் பிரபாகரன் என்ற அந்த ஒற்றை மனிதனின் வரவுக்கு பின்னரே போராடுவதிலும் போராட்டத்தின் உன்னதத்திலும் எழுச்சி கொண்டிருந்தனர்.

அதிலும் 2009 மே மாதத்து பின்னர் அந்த குரலும் மௌனமாகியதன் பின் நாம் அனைவரும் எமது முன்னோர் எப்படி காலனி ஆட்சிக்கும், சிங்களத்துக்கும் எதிராக போராடாமல் ஒருவிதமான நெகிழ்வுத்தனமையுடன் வாழ்ந்தார்களோ அத்தகைய நிலைக்குள் வாழ தலைப்பட்டு விட்டோம். அப்படி வாழ்வதே ஒரு விதமான ராஜதந்திரம் என்று கருதவும் முடிவெடுத்துவிட்டோம்.

இந்த நிலையின் மீதுதான் சிங்களத்தின் இன அழிப்பு முகத்தை உலகுக்கு காட்டுவதற்காக லண்டனில் நடைபெற்ற போராட்டத்தின்போது சிங்கள இனவாதிகள் நடாத்திய தாக்குதல் ஒரு அதிர்வை ஏற்படுத்தி விட்டுச்சென்றிருக்கிறது. ஒரு உலுக்கு உலுக்கி எம்மை நீள் உறக்கத்தில் இருந்து விழிக்கச்செய்துள்ளது.

நாம் போராடாமல் உறங்கி கிடந்தால் காலச்சிலந்தி கூட நம்மீது வலைபின்னி போய்விடும். மூச்சுவிட மறந்தால் வரலாற்று கல்லறைக்குள் தமிழினம் புதைக்கப்பட்டுவிடும். போராட்டத்துக்காக போராட்டம் என்றிருக்காமல் சிங்கள பேரினவாதத்தை சர்வதேச அரங்கில் கூண்டில் நிறுத்தவும், தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை இன்னும் வலுப்பெறச்செய்வதற்காவும் போராட்டங்கள் எழ வேண்டும்.

ஒரு மகிந்த வந்துவிட்டால் ஆயிரம் ஆயிரமாக ஒன்றுகூடி எதிர்ப்பு தெரிவிக்கும் நாம், மகிந்தவின் சிந்தனைகளுக்கு சற்றும் குறைவில்லாத பேரினச் சிந்தனைகளை தாங்கி நிற்கும் சிங்கள தேசத்தின் அனைத்து வளங்களுக்கு எதிராகவும் போராட வேண்டும். அத்துடன் அனைவரும் ஒன்றுகூடியே, ஒன்றாக சேர்ந்தே ஆக வேண்டிய ஒரு வரலாற்றுக் கட்டாயத்தையும் சிங்களம் எம்மீது சுமத்தி உள்ளது. நாம் ஒன்று சேர்ந்தே ஆக வேண்டும்.

ஒன்றாக போராட்டத்தில் இணைந்தே ஆக வேண்டும்.

வரலாறு எம் முடிவுக்காக காத்திருக்கிறது.

வரலாறு என்பது வேறொன்றும் அல்ல. மாவீரர்களின் சரித்திரம்தான்.

வரலாறு என்பது வேறொன்றும் அல்ல.

உன்னதமான நேர்மையுடனும் சத்தியமான உறுதியுடனும், தளர்வே அறியாத பயணத்துடனும், மலையென எழுந்த வீரத்துடனும் எம்மை வழிநடாத்தும் தேசியதலைவரின் சரித்திரமே வரலாறு.

அந்த வரலாற்றின் மீது சத்தியமாக நாம் ஒன்றிணைந்தே ஆகவேண்டும்.

வீழ்வது பிழையே அல்ல. வீழ்ந்து கிடப்பது தான் வரலாற்று தவறு.

தவறுகளை திருத்துவோம்.

எழுவோம்.

போராடுவதால் மட்டுமே விடுதலை கிடைக்கும்.

சும்மா கிடந்தால் வெறும் தீர்வுகளும், முகத்தில் துப்பப்படும் உமிழ்நீர்களுமே கிடைக்கும்.

**மைதானத்துக்கு வெளியே தமிழர்களை இனரீதியாக தரக்குறைவாக பேசி சிங்களம் உமிழ்நீர் சொரியும்போது சிங்கள தேசத்தின் கிரிக்கெட் அணியின் சீருடையை அணிந்து கொண்டு மைதானத்துள் சென்று ஆட்டம் பார்த்து ரசித்த தமிழர்களின் அடிமைப்புத்தியை என்ன சொல்ல முடியும். தூ......**

நேற்று அந்தபோராட்டத்தில் என் தமிழ் உறவு மீது துப்பப்பட்ட உமிழ்நீர் எம் எல்லோர் மீதும் வரலாறு காறி உமிழ்ந்ததாகவே கொள்ள வேண்டும்.

துடைத்துக்கொண்டு தூங்கி கிடக்கப்போகின்றோமோ துணிவுடன் எழப்போகின்றோமா?

எதுவும் எம் கைகளில்தான்.

(மைதானத்துக்கு வெளியே தமிழர்களை இனரீதியாக தரக்குறைவாக பேசி சிங்களம் உமிழ்நீர் சொரியும்போது சிங்கள தேசத்தின் கிரிக்கெட் அணியின் சீருடையை அணிந்து கொண்டு மைதானத்துள் சென்று ஆட்டம் பார்த்து ரசித்த தமிழர்களின் அடிமைப்புத்தியை என்ன சொல்ல முடியும்.......)

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..
உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..



Enrol them in Learna
• Individualised • Interactive • Inspiring
Maths & English Teaching for 4-16 years olds
FREE Assessment
We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics
LEARNA because every child is unique
Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# இலங்கை இந்திய ஒப்பந்தங்களும் இலங்கை செய்த துரோகங்களும்.

பாகம் 135

மக்கள் சக்தியினால் இயங்கும் ஜனநாயக நாடுகளில் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கங்கள் அவ்வப்போது தேர்தலின் மூலம் வேறுபட்ட கொள்கைகளையுடைய கட்சிகளிடம் பாரப்படுத்தப்படுகின்றன. அப்படி ஜனநாயக வழிமுறைகளில் அரசுகள் கட்சிகளினால் கைப்பற்றப்படும்போது கட்சிகள் தங்களது உள்ளூர் சமூக பொருளாதாரக் கொள்கைகளில் சில மாற்றங்களையேற்படுத்தினாலும் வெளிநாடுகளுடன் முந்தைய அரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டே இயங்குவது வழக்கம். இந்தியா நேருவின் காலத்திலிருந்து சோசலிச அணிகளுடன் ஓரளவு சாய்ந்திருந்தாலும் அணிசேராக் கொள்கையையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வந்தது. சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான் உறவுகள் சற்றுப் பலவீனமடைந்து அமெரிக்காவுடன் நட்பினை வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை இந்தியாவுக்கு ஏற்பட்டது. காலமும் சூழ்நிலைகளும்தான் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியதே தவிர காங்கிரஸ் கட்சியினால் வெளியுறவுக் கொள்கையில் வேண்டுமென்றே எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. ரஷ்யாவுடனான இராணுவ, பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் காலாவதியான பிறகு மீண்டும் பலமானதாக பனிப்போர்க்காலத்திற்குப் பிறகு புதுப்பிக்கப் படவில்லையென்பதைத் தவிர இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அப்படியேதான் இருக்கிறது. இவ்வாறு நாடுகள் தமது நட்பு நாடுகளுடனான அரசியல் ராஜதந்திரத் தொடர்புகளில் எவ்வித பெரிய மாறுபாடுகளையும் செய்யாதிருப்பதுதான் பொதுவான இயல்பாயிருக்கிறது.

**கண்ணுக்குக் கண் பல்லுக்கப் பல் என்பதைப் போல தன்னை வஞ்சிக்க முற்படும் இலங்கையை வஞ்சித்துக் கச்சதீவிற்குக் கடற்படையை அனுப்பி அதனை மீண்டும் தன்வசமாக்கிவிடுவது இந்தியாவிற்கு ஒன்றும் பெரிய விடயமல்ல.**

ஒரு கட்சி ஆட்சியிலிருந்தபோது பெறப்படும் ஒப்பந்த அடிப்படையிலான வெளிநாட்டுக் கடன்களை அடுத்த கட்சி ஆடசிக்கு வந்ததும் கட்ட மறுப்பதோ அல்லது செய்த ஒப்பந்தக்களைக் கிழித்தெறிவதோ ஜனநாயக பாரம்பரியங்களுக்கு விரோதமானதாகும். அத்தகையவோர் செயற்பாட்டை முழு உலகமும் முகச்சுழிப்போடு நோக்கும். ஒப்பந்தத்தை மீறிய நாட்டினை நாணயமற்ற நாடாக சர்வதேசம் கணிக்கும். இராணுவப் புரட்சி அல்லது சதி, மக்கள் புரட்சி போன் செயற்பாடுகளால் நாடொன்றின் அரசு கவிழும் போதுகூட புதிதாகப் பதவியிலேறும் அரசாங்கம் கூடிய வரை நிதானத்தைக் கடைப்பிடித்து தமது கடன் சுமைகளை அல்லது வேறுநாடுகளுடனான ஒப்ந்தங்களை நாணயத்தோடு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கவே முயல்கின்றன.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்களும் இதற்கு விதிவிலக்கானவையல்ல. பல்வேறுபட்ட அரசியல் பொருளாதா ஒப்பந்தங்களை இந்தியாவும் இலங்கையும் செய்திருக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருந்தபோது சிறீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மலையகத் தமிழரின் பிரச்சனைக்கு ஓர் முடிவு காணப்பட்டது. இந்தியா இந்த விடயத்தில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு நடந்து கணிசமான அளவு மலையக மக்களை மீண்டும் தன் பிரஜைகளாக ஏற்றுக் கொண்டது. அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட மக்கள் தமது மூட்டை முடிச்சுக்களோடு கப்லில் ஏற்றி அனுப்பப்பட்டபோது அவர்களோடு ஒரு தடவை நானும் ராமானுஜம் என்னும் கப்பலில் ராமேஸ்வரம் வரை பயணித்திருக்கிறேன். அந்த மக்கள் இந்தியாவுக்குப் பெரும் எதிர்பார்ப்புகளோடு சென்றனர். ஆனால் அங்கு அவர்களுக்குத் தாங்கள் எதிர்பார்த்தபடி மகிழ்வான வாழ்க்கை கிடைக்கவில்லை. இதைக்கேள்வியுற்ற மலையக மக்கள் பலர் தங்களுக்குக் கிடைத்த இந்தியப் பிரஜாவுரிமையையும் பாஸ்போட்டையும் கிழித்தெறிந்துவிட்டு இலங்கையிலேயே தங்கிவிடுவதென முடிவெடுத்தனர். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தப் பிரகாரம் கட்டாய நாடுகடத்தல் அனுமதிக்கப்படாததால் இந்தியாவுக்குப் போக மறுத்த இந்த மக்களை நாடு கடத்த முடியவில்லை. இதனால் இவர்களுடன் சேர்த்து இந்தியப் பிரஜாவுரிமை கிடைக்காத அதே வேளை இலங்கைப்பிரஜாவுரிமையும் கிடைக்காத மலையகத் தமிழர்கள் நாடற்றவர்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டனர். இலங்கை கணிசமானதொகை மலையகத் தமிழர்களை இந்த வகைப் பிரிவுக்குள் வைத்திருந்து நெடுங்காலம் அவர்களை மனிதாபிமானமற்ற வகையில் தொல்லைகளுக்குள்ளாக்கியது. தமிழர்கள் இந்த வேதனையை 1990 வரை அனுபவித்தனர். அதன் பிகுதான் நாடற்றவர்கள் என்ற பிரிவினர் இல்லாதொழிக்கப்பட்டனர். தமிழர்களைத் தம் எதிரிகளாகப் பாவித்த காரணத்தினால் இலங்கை இந்தியாவுடன் நாணயமற்ற விதத்திலேயே நடந்து கொண்டது. தமிழர்களில் ஒரு பகுதியினரை ஏற்றுக்கொள்ள இந்தியா முன்வந்தும் இலங்கை அனுப்பக் கூடியவர்களை அனுப்பிவிட்டு மிகுதிப்பேரில் ஒரு பகுதியினருக்கு மட்டும் இலங்கைப் பிரஜாவுரிமையை வழங்கியதோடு மற்றவர்களுக்கு எவ்வித உரிமைகளையும் வழங்காமல் அவர்களை நட்டாற்றில் விட்டது. இது சிறிமாவின் காலத்தில் இந்தியாவுக்கு இலங்கை செய்த மிகப் பெரிய துரோகமாகும்.

அதற்கடுத்ததாக இலங்கை சிறீமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் கச்சதீவை இந்தியாவிடம் (இந்திரா காந்தியிடம்) கெஞ்சிக் கேட்டு வாங்கிக்கொண்டது. இதன் உள்நோக்கம் தனது கடல் எல்லைக்குள் தமிழ்நாட்டு மீனவர்களை உள்நுழைய விடாமல் தடுத்து நிறுத்துவதோடு சிங்களவர்களால் கள்ளத் தோணிகள் என்று வழங்கப்பட்டுவந்த தமிழக மக்களின் பிரவேசத்தைத் தடுப்பதுமேயாகும். இந்தியா கச்சதீவை இலங்கையிடம் கையளித்தபோது அங்கிருந்த கத்தோலிக்க கோவில் வருடாந்த உற்சவத்தின்போது இருநாட்டவர்களும் பங்கேற்கவேண்டும் என்னும் ஓர் பிடிமானத்தை மட்டும் வைத்துக் கொண்டு அத்தீவின் மீதான ஏனைய அனைத்து உரிமைகளையும் இலங்கைக்குத் தாரைவார்த்துவிட்டது. இதனையும் இலங்கை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தற்போது அந்தத் தீவையணுகும் தமிழக மீனவர்களைச் சுட்டுத்தள்ளுகிறது. இதுவரை எண்ணூறுக்கு மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியா இலங்கையின் துரோகத்தால் திகைத்து நிற்கிறது. தற்போது சீனக் கடற் படையினரும் இலங்கைப் படையினருடன் கச்ச தீவுப் பகுதியில் உலாவருவதாகச் செய்திகள் அடிபடுகின்றன. போதாததற்கு சீன மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கொடியுடன் இந்தப் பிரதேசத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சமீபத்திய செய்திகள் கூறுகின்றன.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தற்போது இலங்கை செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கும் பெரிய துரோகம் ஜேஆர் ராஜீவ் ஒப்பந்தத்தை மீற முயற்சிப்பதாகும். இந்தியா, இலங்கை, ஈழத்தமிழர்கள் ஆகிய முத்தரப்பினரதும் பெருத்த உயிர்த் தியாகங்களுக்கு மத்தியில் ஐ.தே.க ஆட்சியிலிருந்த போது கைச்சாத்டப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் தமிழகத்தில் இந்தியா எதிர்நோக்கிய கொந்தளிப்பு நிலையை மையப்படுத்திப் பரஸ்பர புரிந்துணர்வோடு கொண்டுவரப்பட்டதாகவே அந்த நேரத்தில் கருதப்பட்டது. ஆனால் முகச்சுழிப்போடு அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை அந்த ஒப்பந்தம் கைச்சாத்டப்பட்டபோது எவ்வாறு நடந்துகொண்டது என்பதை யாவருமறிவர். 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் இலங்கையிலுள்ள சிறுபான்மையினரையும் உள்ளூர் மாகாண அரசியலில் பங்கு கொள்ள வைத்து அவர்களை அரசியல் ரீதியில் ஓரளவுக்காவது திருப்திப்படுத்தி விடலாமென்று இந்தியா கனவுகண்டது. ஆனால் இலங்கையிலுள்ள பேரினவாதிகள் அந்த அதிகாரப் பரவலாக்க முறைமைக்கு எப்படியாவது சாவு மணியடித்து விடுவார்கள் என்பது இப்போது தெளிவாகிவிட்டது. இரண்டு நாடுகளுக்கிடையில் செய்யபபடும் ஓர் ஒப்பந்தத்தைத் துரோகத்தனமாகக் கிழித்தெறியும் நடவடிக்கை மூலம் இந்தியாவின் முகத்தில் இலங்கை கரிபூசுமானால், அதற்குப் பதிலடியாக இலங்கைக்கு வழங்கிய கச்சதீவை மீளப் பெறவும் இந்தியாவால் முடியும். தற்போது தமிழக அரசாலும் எதிர்த்தரப்பினராலும் அந்தத் தீவை மீளப் பெற வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. இலங்கையின் துரோகத்தனங்கள் எல்லைமீறிப் போகுமானால் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான கடல் எல்லையைத் தீர்மானிப்பதில் பெரும் இழுபறிநிலை தோன்றுவதையும் தவிர்க்கமுடியாது போய்விடும். கண்ணுக்குக் கண் பல்லுக்கப் பல் என்பதைப் போல தன்னை வஞ்சிக்க முற்படும் இலங்கையை வஞ்சித்துக் கச்சதீவிற்குக் கடற்படையை அனுப்பி அதனை மீண்டும் தன்வசமாக்கிவிடுவது இந்தியாவிற்கு ஒன்றும் பெரிய விடயமல்ல. தன்னைச் சார்ந்திருக்கும் குட்டி நாடு என்ற அனுதாபத்தோடு இந்தியா இலங்கையின் துள்ளல்களை மிகவும் பொறுமையோடு சகித்துக் கொள்கின்றதேயொழிய இலங்கையை வழிக்குக் கொண்டுவருவதற்கு அந்தப் பெரிய தேசத்திற்கு வேறுவழிகளுமுள்ளன. ஜேஆர் ராஜீவ் ஒப்பந்தத்திற்கு மாறாக 13ம் திருத்தச் சட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கும் மாற்றங்கள் அல்லது அதற்கான முயற்சிகள் இந்தியாவின் கௌரவத்தைப் பாதிக்கும் நிலையேற்டுமானால் இலங்கை அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியேற்படும். ஏற்கனவே சர்வதேசரீதியில் தன் செல்வாக்கை இழந்துபோயிருக்கும் இலங்கையைத் தூக்கி நிறுத்தி வைத்திருக்கும் இந்தியாவின் ஆதரவு விலக்கப்படுமானால் இலங்கை அரசியல் ராஜதந்திர ரீதியில் இக்கட்டான சூழ்நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். இந்தியாவிலிருந்து ஆக இருபத்தியிரண்டே மைல்தூரக் கடல் எல்லையுள் இருக்கும் இலங்கைக்குச் சீனா வந்து எல்லா உதவிகளையும் செய்யுமென்று எதிர்பார்க்க முடியாது. தூரத்துத் தண்ணீர் ஆபத்திற்குதவாது.

### ◆ நடிகர் மணிவண்ணனின் மறைவு

சமீபத்தில் காலமான தமிழீழ உணர்வாளரும் டைரக்டரும் நடிகருமான மணிவண்ணனின் இழப்பு ஈழத்தமிழர்களுக்குப் பேரிழப்பாகும். அவரைப் போன்ற பிரபலங்களின் பேச்சுக்களால் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமிழகத்தில் மிகுந்த ஆதரவு ஏற்பட்டதை நாம் நன்றியுடன் நினைவு கூரவேண்டும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர் அங்கம் வகித்த நாம் தமிழர் இயக்கத்தினருக்கும் ***ஒரு பேப்பர்*** அலசு வாரம் வாசகர்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திடைய பிரார்த்திப்போம்.

### ◆ அன்னை திருமதி சீதாதேவி மகாதேவாவின் மறைவு

இளைப்பாறிய குழந்தை மருத்துவரும் ஈலாப் எனப்படும் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினருமான திருமதி சீதா மகாதேவா அவர்கள் அண்மையில் காலமானதும் புலம்பெயர் சமூகத்தில் ஓர் பேரிழப்பாகும். மிகுந்த தமிழ்த் தேசிய உணர்வாளரான அன்னார் ஓர் சிறந்த புத்திஜீவியாக இருந்து அரிய பல அறிவியல் விஞ்ஞான ஆக்கங்களை ஈலாப்பின் வருடாந்தத் தொகுப்புநூலான பூந்துணரினூடாக வெளிக்கொணர்ந்தார். ***ஒரு பேப்பர்*** அலசு வாரம் வாசகர்கள் சார்பில் பேராசிரியர் கோபன் மகாதேவா குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னை திருமதி சீதாதேவி மகாதேவாவின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திப்போம்.

தொடருவம்...

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா


# வன்முறையற்ற அரசியலுக்கான புகழாரங்களுடன் தமிழரசுக்கட்சியின் அரசியல் - 02





**சாந்தி சச்சிதானந்தம்**

*(கடந்த இதழில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...)*

இப்போது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதால், இந்த இக்கட்டான நிலையில் வன்முறையற்ற வழிக்கு நாம் சென்றுள்ளோம். இந்நிலையின் அதன் தர்க்கரீதியான நியாயத்தையும் அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகளையும் அறிந்து கொள்ளவேண்டிய அவசியமாகவுள்ளது.

**ஆயுதங்களை பயன்படுத்தாமிலிருத்தல் என்பதற்கு அப்பால் நீதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு ஒரு அஹிம்சாப் போராளிக்கு இருக்க வேண்டும்.**

இது மகாத்மா காந்தியால் பின் பற்றப்பட்ட தத்துவம் எனினும் அவர் வன் முறையற்ற அரசியல் பற்றி இரட்டைநாக்குடன் பேசினார் என்பதனை நாம் உணர்ந்து கொள்வது அவசியமானது.

ஆயுத மற்ற வெகு மக்களை, வன்முறையற்ற வழிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு அவர் பரிந்துரை செய்தார், ஆனால் ஆயுதமயப்பட்ட அரசுகளை வன்முறையைப் பின்பற்ற வேண்டாம் என அவர் வேண்டிக் கொள்ள வில்லை. இச்சிந்தனை எப்படிப்பட்டதெனில், அரசுகள் வன்முறையை பாவிப்பது சட்டபூர்வமானது, அதே சமயத்தில் வெகுமக்களோ பொறுமையை கடைப் பிடிப்பதுடன் தங்களை எல்லாவித அர்ப்பணிப் புகளுக்கும் தயாராக வைத்திருக்க வேண்டும் என்பதாக இருக்கிறது. ஒருவேளை அரசுகளின் இயல்புகளை மாற்ற முடியாது எனஅவர் எண்ணியிருக்கக்கூடும்.

அரசுகள் கொண்டிருக்கும் மிதமிஞ்சிய ஆயுதபலத்தினைக் குறைப்பது தொடர்பில் இப்போது சர்வதேச சமூகம் மெல்ல மெல்ல கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. பாதுகாப்பதற்கான பொறுப்பு (Responsibility to Protect) என்ற கோட்பாடு அந்த வகையில் அமைந்துள்ளது. நாடுகள் பல்லினங்களைக் கொண்டதாகவும், அவை அதன் ஒவ் வொரு குடிமக்கள் விடயத்திலும் பொறுப்புக் கூறவேண்டிய கடமையுடன் செயற்படவேண்டும் என இன்று எதிர் பார்க்கப்படுகிறது. இவ்வாறான புதிய ஒழுங்கினை ஏற்படுத்தும்வரை பாரம்பரியமாக நாம் நம்பிக்கொண்டிருக்கும் வன்முறையற்ற நிலையை எட்டும் விடயத்தில் நாம் அதிக தூரம் சென்றுவிடமுடியாது. ஆகவே தமிழரசுக் கட்சியானது வெறுமனே "தமிழருக்கான உரிமைகள்" பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஜனநயாக உரிமைகளைப் பேணும் விடயஙகளில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறானால் காந்தி, மாட்டின் லூதர் கிங் போன்றவர்கள் பின்பற்றிய வன்முறையற்ற பாதை எப்படியானது? அவர்கள் இப்பாதையைப் பின்பற்றி வெற்றிபெறவில்லையா? என்ற கேள்விகள் எழலாம். தனித்து, வன்முறையற்ற இயக்கங்களின் மூலம் எப்போராட்டமும் வெற்றி பெற்றதாக வரலாற்றில் எங்கும் காண முடியாது. இந்திய சுதந்திரப்போராட்ட இயக்கம் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் இந்திய தேசிய இராணுவத்தினாலும், பல்வேறு தொழிற் சங்களினாலும் தொழிலாளர் உரிமைக்காக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை நடவடிக்கையினாலும், இயக்கம் கண்டது. இத்தகைய கிளர்ச்சிகளால் இந்தியாவை ஆட்சிசெய்ய முடியாத நிலை பிரித்தானியர்களுக்கு ஏற்பட்டது. மற்றய நாடுகள் விடயத்திலும் இது போன்று சுவாரசியமான அனுபவங்கள் உள்ளன. இவ்விடயங்களைப்பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கு முன்னணி ஊடகங்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை, அதுபோல் போராட்டங்களில் ஈடுபட்ட மற்றவர்களின் வகிபாகம் பற்றிய விபரங்களும் முக்கியத்துவப் படுத்தப் படுவதில்லை. வெகுமக்கள் வன்முறை தழுவிய போராட்டங்களில் ஈடுபடுவதை ஆளும் வர்க்கத்தினர் ஒருபோதும் விரும்புவதில்லை என்பதனால், அவர்களது ஆதரவுடன் எழுதப்படும் வரலாறுகளில் இவை இடம் பெறுவது தவிர்க்கப் படுகிறது. ஆக்கிரமிக்கப் பட்ட திபெத் தொடர்ந்து வன்முறையற்ற போராட்ட வழிமுறையை மட்டுமே பின்பற்றி வந்தால் அங்கு என்ன நடைபெறும் என்பதனை எங்களால் இலகுவில் ஊகிக்கலாம். ஆனால் இதுபற்றி, அதாவது வன்முறையற்ற போராட்ட இயக்கங்களின் தோல்வி பற்றி அதிகம் பேர் பேசுவதில்லை.

இவ்வாறு கூறும்போது வன்முறையற் வழிமுறையை கடைப்பிடிப்பதில் அனுகூலங்கள் எதுவும் இல்லை என எடுத்துக் கொள்ள முடியாது. வன்முறையற்ற வழிமுறைகளை கடைப் பிடிப்பதற்கு, முன் அனுமானிக்கக் கூடிய விடயங்கள் காணப்பட வேண்டும். ஆயுதங்களை பயன்படுத்தாமிலிருத்தல் என்பதற்கு அப்பால் நீதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு ஒரு அஹிம்சாப் போராளிக்கு இருக்கவேண்டும். ஆதலினால் நீதியரசர் விக்கினேஸ்வரன் தனதுரையில் சரியாக விளக்கியுள்ளதுபோன்று, இணைத்துச் செயற்படுவதற்கு பல பரிமாணங்கள் கொண்ட அணுகுமுறைகளை உருவாக்க வேண்டும், அவை எதிரியை இனங்காட்டுவதாக அல்லது அவர்களை இலக்கு வைப்பதாக அமைய வேண்டியதில்லை. சத்தியாகிரக போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு அத்தர்மத்தைப் பயிற்றுவிப்பதற்காக காந்தி பல ஆச்சிரமங்களை அமைத்தார். தனிநபர் ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதற்கு, எதிர்த்தரப்பின் மனதினை மாற்றுவதற்கான தார்மீக அடித்தளத்தை ஏற்படுத்துவ தற்கு இது அவசியமாயிருந்தது. வன்முறையற்ற போராட்டங்களில் தமிழ் மக்களை ஈடுபடவைப்பதற்கான பயிற்சியினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இலங்கை தமிழரசுக்கட்சி கொண்டிருக்கிறதா? மக்களை கிரமமாகச் சந்திப்பது என்பது ஒருபுறமிருக்க, உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் தமது கட்சி உறுப்பினர்களைக் கூட அத்தேர்தல்களுக்குப் பின்னர் தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் சந்திப்பதில்லை என்பது எல்லோரும் அறிந்த விடயம். இந்நிலையில் அவர்கள் வன்முறையற்ற போராட்டங்கள் பற்றி வெளியிடும் பகட்டான அறிக்கைகளைப் பார்க்கும்போது களிப்புக்கு இடமாக இருக்கிறது. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயாராக இருக்கிறார்கள் என்பதனையே அவர்களது வன்முறையற்ற வழிமுறையாகக் கூறுகிறார்கள். கடந்த அறுபது வருடங்களாக இதனையே கூறிவருகிறார்கள். எவ்விதமாக கற்பனை செய்து பார்த்தாலும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை மாத்திரம் வைத்து வன்முறையற்ற அரசியல் நடவடிக்கையை கடைப் பிடிப்பதாகக் கூறமுடியாதுள்ளது.

இன்னொரு முக்கியவிடயம், உலகில் வன்முறையற்ற வழிமுறைகளை கடைப்பிடித்த இயக்கங்களின் தலைவர்கள் யாரும் தேர்தல் அரசியலில் ஈடுபட்டதில்லை. தேர்தல் அரசியல் என்பது முற்றிலும் வேறுபட்ட விடயம். அது பகுத்தறிவற்ற முறையில் உணர்ச்சியின் பாற்பட்டு மக்களின் ஆதரவினைப் பெறுவது. ஒரு சத்தியாக்கிரகப் போராளி ஒரே சமயத்தில் தேர்தலில் குதிக்கும் அரசியல்வாதியாகவும் இருக்க முடியாது. ஏதாவதொரு சமயத்தில் பாராளுமன்ற ஆசனங்களைத் தக்கவைப்பது தர்மத்தின் அடிப்படையிலான யுத்தத்திற்காக மக்களை அணிசேர்ப்பதனை விட முக்கியமானதாகத் தெரியும். 1961 ம் ஆண்டு தமிழரசுக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டபட்ட சத்தியாக்கிரகப்போராட்டம் பரந்துபட்ட ஆதரவினை பெற்று, வெற்றிகரமாக நடைபெற்றதெனில் அதனை ஏன் அவர்கள் தொடரவில்லை என்ற முக்கியமான கேள்வியினை ஒரு சிலரே கேட்கிறார்கள். சாதாரண சூழ்நிலையில், வெற்றியளிக்காத முன்னெடுப்புகளே கை விடப் படுகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் பங்குபற்றி அங்கு அரச நிர்வாகத்தை ஸ்தம்பிதமடையச் செய்திருந்த போதிலும், அவற்றைத் தொடர்வதை விடுத்து முன்னைய நிலைக்குத் திரும்பி, திரு. டட்லி சேனநாயக்கவுடன் பின்கதவு வழியில் தேர்தல் உடன்படிக்கையில் ஈடுபட்டது ஏன்? அதுவும் அப்போது பண்டா- செல்வா உடன்படிக்கையின் தோல்வியிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களும் கைவசம் இருந்தன. அதன் பின்னர் மக்களை அணிதிரட்டும் எல்லா நடவடிக்கைகளும் கைவிடப்பட்டன. இவ்வாறு வரலாறு நெடுகிலும் தமிழ்த் தலைவர்கள் தமது சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**எவ்விதமாக கற்பனை செய்து பார்த்தாலும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை மாத்திரம் வைத்து வன்முறையற்ற அரசியல் நடவடிக்கையை கடைப்பிடிப்பதாகக் கூறமுடியாதுள்ளது**

இன்று தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற நிலையிலிருந்து அழித்தொழிக்கப்படும் அபாயநிலையில் இருக்கின்றனர். இந்நிலையில் அவர்களுக்கு அனுபவமிக்க நேர்மையான தலைமைத்துவம் தேவைப்படுகிறது. வழமையான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தருணம் இதுவன்று. எனது வேண்டுகோள் என்னவெனில், தமிரசுக்கட்சியும், தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றய கட்சிகளும் சிறிலங்கா அரசாங்கத்தையம், சிங்கள மக்களையும் எதிர்கொள்வதில் புதிய அணுகுமுறையினை கடைப்பிடிக்க வேண்டும். இவ்விடயத்தில் இங்குள்ள தமிழர்களும் புலம் பெயர் தமிழர்களும் தங்களுடைய பங்கினைச் செலுத்த வேண்டும். பலவருடங்களாக பின்பற்றி வந்த பாதையை தொடர்ந்தும் குருட்டுத்தனமாகப் பின்பற்ற முடியாது. உயிர்ப்பான முறையில் எமது, சமுதாயத்திலும் அரசியலிலும் நிலைமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design

## ஊக்கமது கைவிடேல்



விஞ்ஞான உலகத்தில் வியப்பரிய சாதனைகளைப் படைத்த ஆராய்ச்சியாளர்களின் பின்புலத்தை நோக்கினால், அவர்களுடைய வெற்றிக்கு அயராத உழைப்பும், ஊக்கமும் தான் கைகொடுத்துள்ளதை அறிவோம். தொழிலில் சாதனை படைத்து, உலகில் முன் வரிசையில் நிற்கும் ஒவ்வொரு தொழிலதிபர்களின் பின்புலத்தை ஆராய்ந்தால், அவர்களது அயராத உழைப்பும் சோர்வடையாத முயற்சியும் தான் அவர்களது வெற்றிக்கு வழிவகுத்துள்ளது. எந்தத் துறையிலும் இன்று முன்னுக்கு நிற்பவர் யாபேரும், அவர்கள் காட்டிய அக்கறையும், உழைப்பும், ஊக்கமும் தான் சாதனைக்கு வழி அமைத்துள்ளது. ஆகவே தான் ஔவைப் பிராட்டியார் கூறிய ஊக்கமது கைவிடேல் என்ற அறிவுரை எந்தக் காலத்துக்கும் பொருத்தமாக இருப்பதை அறிவோம்.

பிறந்த நாட்டில் கௌரவமாக வாழ்ந்த தமிழ் மக்களிடமிருந்து கல்வியைப் பறித்து, தொழிலைப் பறித்து, காய்ந்து கிடக்கும் மண்ணையும் பறித்து அகதிகளாகத் துரத்திவிடப்பட்ட ஈழத் தமிழர்கள் சென்ற இடங்களில் எல்லாம் இன்று செழிப்புடன் வாழ்வதற்கு அவர்கள் காட்டிய அயராத முயற்சியே என்று கூறுவது மிகையாகாது. இழந்த கல்வியை எண்ணியும், செய்த தொழிலை நினைத்து ஏங்கியும் சோர்ந்து முடங்கிப் போயிருப்பார்களேயானால், இன்று அவரவர் சென்றடைந்த நாடுகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருக்க வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும்.

எனினும், இழந்த பூமியை மீட்டெடுக்கவும், அடிமைத் தளையை அறுத்தெறியவும், கௌரவமான இனமாக மீண்டும் ஈழத்தை அடையவும் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகப் போராடும் தமிழினம், தமது முயற்சியில் சோர்வடையாமல், புதிய உத்வேகத்துடன் செயலாற்ற வேண்டுமென்பதே ஊக்கமது கைவிடேல் கூறும் உற்சாகமான அறிவுரையாகும்.

ஆத்திசூடியில்கூறியுள்ள அறிவுரைகளை எனது கட்டுரை மூலமாக வாசிக்கும் ஒரு இளைய தலைமுறையைச் சேர்ந்த ஒரு பேப்பர் வாசகர் என்னைச் சந்தித்தபோது, அடுத்த தலைப்பு எதுவென விசாரித்தார். நான் தலைப்பைக் கூறியதும், அவர் தந்த விளக்கம் தான் தலையை சுற்ற வைத்தது. 'ஊக்கம் தரும் மதுவை கைவிடாதே' என்று அவர் கொடுத்த விளக்கம் எப்படியெல்லாம் கருத்தை தமக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளலாம் என்பதற்கு நல்ல உதாரணம். நல்ல வேளை ஔவையார் உயிரோடு இல்லை.

## வானளாவிய மாடிகளை அடைய நவீன எலிவேட்டர்

கட்டிடங்கள் உயர உயர படிகளும் உயரத்தான் செய்யும். 828 மீற்றர் உயரத்துக்கு டுபாயில் கட்டியெழுப்பப்பட்ட Burj Khalifa எனும் உயர்ந்த கோபுரத்தை அடைய, இரண்டு எலி வேட்டர்கள் மாற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. 500 மீற்றர் உயரத்துக்கு மேலே செல்ல முடியாமல் தடுமாறும் எலிவேட்டர் அதனை இயக்கும் பழுவான இரும்பு வடமே காரணம் என பொறியிலாளர்கள் கூறுகின்றனர்.

அதேநேரம், சவுதிஅரேபியாவில் எழுப்பப்படும் கிங்டம் கோபுரத்தை 1 கிலோமீற்றர் உயரத்துக்கு ஒரே தாவில் சென்றடையக் கூடிய எலிவேட்டரை 2019ஆம் ஆண்டளவில் உபயோகிக்க முடியுமென கட்டிடத் தொகுதி பொறியிலாளர் சூழுரைத்துள்ளனர். எது எப்படி முடியுமென ஆராய்ந்தபோது நிறைகூடிய இரும்பு வடத்துக்குப் பதிலாக அல்ரா வடம் (Ultra Rope) எனும் புதிய நாடாவைத் தயாரித்துள்ளனர். கயிறு போலல்லாமல் தட்டையான நாடாவாகவும், இரும்பு வடத்தை விட அதிக சக்திவாய்ந்ததாகவும், எடையைப் பொறுத்தமட்டில், ஏழில் ஒரு பங்கு மாத்திரமே நிறையுடையதாகவும் இருக்கும் இப்புதிய அல்ரா வடத்தை பின்லாந்தைச் சேர்ந்த பிரபல லிப்ட் தொழில் நிறுவனமான கோன் அமைப்பு அறிமுகப்படுத்தியுள்ளது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

வான் உயரக் கட்டிடங்கள் வளர வளர அதன் உயரத்தை அடைய நம்பிக்கையான, சக்தி வாய்ந்த எடை குறைந்த நாடாக்கள் எலிவேட்டர்களை இயக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றன.

## ஸ்றோபெறீ பழுதடையாமல் பாதுகாக்க UV ஒளிவீச்சு



கோடை காலத்து பழவகைகளில் ஸ்றோபெறீஸ் அதிகமானவர்களால் விரும்பப்படுவதால், விற்பனை நிலையங்களில் நிரம்பி வழிவதைக் காணலாம். எனினும், குறைந்த ஆயுளைக் கொண்ட இப்பழங்களை பழுதுபடாமல் பாதுகாக்க குளிரூட்டும் பெட்டிகளிலோ, குளிரூட்டப்பட்ட பகுதிகளிலோ விற்பனைக்காக வைத்திருப்பதை அவதானித்திருப்பீர்கள். இதன் அழகிய தோலின் நிறமும், ஆரோக்கியத்திற்கு அதனால் கிடைக்கும் நன்மைகளும் கெட்டுவிடாமல் பாதுகாப்பது பெரிய சிரமமாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் அவதானித்துள்ளனர்.

ஸ்றோபெறீஸ் மரங்களிலிருந்து பழமாகப் பருவமடைவதற்கு மிக அருகாமையிலேயே இவை பறிக்கப்பட்டு விற்பனைக்கு வருவதால் இதன் ஆயுளை நீடிக்க அல்ற்றா ஊதா (Ultra Violet) நிறமுடைய ஒளிவீச்சை இப்பழங்கள் பறிக்கப்பட்ட கையோடு இதன் தொகுதி மீது பாய்ச்சுவது நடைமுறையாகும். ஊதா வெளிச்சத்தில் வெளிப்படும் பாதரசம் உடல் நலத்துக்கு கேடுவிளைவிக்கும் என்ற காரணத்தினால், இதன் பாவனையை பக்குவமாகக் கையாள ஆராய்ச்சியாளர்கள் முன் வந்தனர்.

மேரிலாண்டைத் தளமாகக் கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் உணவு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் ஆய்வாளரான ஸ்ரீபன் பிறீட்ர் ஊதா நிற பாதரசத்தின் வெளிச்சத்துக்குப் பதிலாக UV-LEDs ஒளியைப் பாய்ச்சி குளிரூட்டப்பட்ட பெட்டிக்குள் ஸ்ரோபெறிஸ் பழங்களைக் கெட்டுப் போகாமல் பாதுகாக்க முடியுமென நிரூபித்துள்ளனர்.

குளிர்சாதனப் பெட்டிக்குள் பொருத்தப்படும் ஊதாநிற LED ஸ்ரோபெறீஸ் நிரப்பியுள்ள அறைக்கதவு மூடியவுடன் தானாக இயக்கி பழங்கள் பழுதடையாமல் பாதுகாக்கத் தேவையான அளவு வெளிச்சத்தை மட்டும் கொடுக்கும் வகையில் குளிர்சாதனப் பெட்டிகள் வருங்காலத்தில் தயாரிக்கப்படுமென பிறிஸ் தெரிவித்துள்ளார். இப்புதிய பொறிமுறையினால், பூஞ்சணம் போன்ற நோய்கள் பழங்களை அணுகாமல், நீண்ட நாட்களுக்கு குளிர்சாதனப் பெட்டிக்குள் பாதுகாக்க வழி கிடைத்திருப்பதால், பழுதடைந்து வீசப்படும் பழங்கள் இனிமேல் தவிர்க்கப்படுமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். குளிர்சாதனப் பெட்டிகள் வாங்கும்போது UV LED வசதி பொருத்தப்பட்டுள்ளதா எனத் தெரிவு செய்வது நல்லதல்லவா.


வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் (ஐ.இ)

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின்
22வது வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி

காலம்:
30.06.2013
ஞாயிறு கிழமை

இடம்:
Tooting Bec Athletics Track
Tooting Bec Road, Lodon SW17 3NP

நேரம்:
மதியம் 12.00
முதல்
மாலை 6.00
வரை

நான்கு வயது முதல் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் பங்குபற்றி விளையாடும் காட்சியைக்கான அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பார்வையாளர் நிகழ்ச்சிகள்:
கயிறு இழுத்தல் ▪ தம்பதியர் ஓட்டம் ▪ கழகங்களுக்கிடையேயான அஞ்சலோட்டம்
▪ சிறப்பாக பெண்களுக்கான பாடும்பந்து நிகழ்ச்சி.. இன்னும் பல...

நிகழ்ச்சிகள் யாவும் குறித்த நேரத்திற்கு ஆரம்பிக்க வேண்டியுள்ளதால் பங்குபற்ற விரும்பும் வீரர்களின் பெயர்களை உடனடியாக கீழ்உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யும்படி தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு
அருணாசலம்
07894 908550
கிசோக்
07850 469803
ஜீவன்
07429 058469

மேலதிக விபரங்களுக்கு www.vvtuk.com ஐ பார்க்கவும்.

# எரியும் இந்திய அரசியலும் சரியும் ரூபாவும்







**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

அட்சயத் திதிக்கு தங்கம் வாங்கினால் செல்வம் சேரும் என இந்துக்கள் நம்புகிறார்கள். ஆனால் இந்தியாவின் மத்திய வைப்பகமான பொது இருப்பு வைப்பகத்தைப் (Reserve Bank) பொறுத்தவரை இது பிழைத்து விட்டது. அட்சய திதிக்கு இந்தியர்கள் நிறைய தங்கத்தை இறக்குமதி செய்தனர். இதைத் தொடர்ந்து இந்திய ரூபாவின் மதிப்பு சரியத் தொடங்கியது. போதாக் குறைக்கு இந்திய மத்திய வங்கி நாட்டில் பணப்புழக்கம் அதிகரிக்கப்படும் என்று ஒரு சைகைப்பட அறிக்கையையும் விட்டது. இதனால் இந்திய ரூபாவின் மதிப்பு மேலும் சரியத் தொடங்கியது. அது மட்டுமா அமெரிக்காவின் வேலை வாய்ப்புத் தொடர்பான புள்ளி விபரங்கள் அமெரிக்க பொருளாதாரம் சீரடையும் என்பதைச் சுட்டிக்காட்டியது. இதைத் தொடர்ந்து அமெரிக்க நாணயமான டொலரின் மதிப்பு உயர்த் தொடங்கியது. இதனால் இந்திய ரூபாய்க்கு அடிக்கு மேல் அடி.

### ◆ தெய்வம் ஒன்று நினைக்க நிதிச் சந்தை வேறு நினைத்தது

2014இல் அல்லது அதற்கு முன்னர் வரவிருக்கும் இந்திய பாராளமன்றத் தேர்தலுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தை சற்று மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்திய மத்திய வங்கி நாட்டில் நாணயப் புழக்கத்தை அதிகரிக்க எண்ணியிருந்தது. அவர்களின் திட்டத்தில் மண் விழுந்து விட்டது. மாறாக இப்போது பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த இந்திய வட்டி வீதம் அதிகரிக்கப்படும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சரியும் இந்திய ரூபாவின் மதிப்பை சமாளிக்க இந்திய அரசு எஃகு ஆணையத்தில் (Steel Authority) தனக்கிருந்து பங்குகளை 15 பில்லியன்களுக்கு விற்றும் பயனளிக்கவில்லை. இந்த விற்பனையால் தனது நிதிக்கையிருப்பை அதிகரிக்கலாம் அது ரூபாவின் மதிப்பை உயர்த்தும் என் இந்திய மைய வங்கியான ரிசேர்வ் வங்கி கணக்கிட்டிருந்தது. ஆனால் அது சரிவரவில்லை. இந்திய ரூபாவின் மதிப்பு சரிந்தவுடன் வெள்நாடுகளில் வாழும் இந்தியர்கள் தம்மிடம் இருந்த பணைக்கையிருப்பை ரூபாக்களாக மாற்றி அதிக ரூபாக்களைப் பெறும் நோக்குடன் தமது பணங்களை இந்தியாவிற்கு அனுப்பினர். இந்திய ரூபா தொடர்ந்தும் சரிவடைந்ததால் அந்த நடவடிக்கைகளும் குறைந்து விட்டன. ஆசிய நாணயங்களில் இந்த ஆண்டு அதிக மதிப்பிறக்கம் அடைந்த நாணயமாக இந்திய ரூபா இருக்கிறது. இந்தியாவின் 650,000 கிராமங்களில் 36,000 கிராமங்கள் மட்டுமே வைப்பகங்கள் உள்ள கிராமங்களாகும். இந்தியாவின் நிதிச்சந்தை மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிறது. கிராம மக்கள் தமது சேமிப்புக்களை தங்கத்தில் முதலிடுகிறார்கள். சிறந்த நிதிச் சந்தை இருந்தால் மட்டுமே சேமிப்பு உற்பத்தித் துறைக்கு திருப்பப்பட்டு பொருளாதாரம் மேம்படும். சிட் பண்ட்களில் முதலிட்டு பல தடவை ஏமாந்த இந்தியக் கிராம மக்கள் தங்கத்தை வாங்குவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்தியாவின் தங்கம் மற்றும் வெள்ளி இறக்குமதி கடந்த ஆண்டில் 90 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்தியா ஆண்டுக்கு 8.39 பில்லியன் டாலர்களுக்கு தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்கிறது.

### ◆ அதிகரிக்கும் விலைகள்

சரியும் ரூபாவின் மதிப்பும் அதிகரிக்கு அமெரிக்க டாலரின் மதிப்பும் இந்திய இறக்குமதிப் பொருள்களின் விலைகளை அதிகரிகச் செய்தன. முக்கியமாக எரிபொருள்களின் விலை அதிகரித்தது. எரிபொருள் விலை அதிகரிக்கும் போது போக்குவரத்துக் கட்டணம், உள்ளூர் பொருள்களுக்கான உற்பத்திச் செலவு, விநியோகச் செலவு போன்றவை உயர்ந்து பொருள்களின் விலைகள் பரவலாக அதிகரிக்கும். இது ஆளும் காங்கிரசுக் கட்சியின் செல்வாக்குக்கு உகந்ததல்ல. ஒரு மாதத்திற்கு முன்னர் வெளி நாட்டில் இருந்து இறக்குமதி உத்தரவு கொடுத்த இந்திய இறக்குமதியாளார்கள் ரூபாவின் மதிப்பிறக்கத்தால் உத்தரவின் படி வந்து இந்திய துறைமுகங்களில் வந்திறங்கிய பொருட்களை வாங்குவதை தவிர்க்கிறார்கள்.

### ◆ ஊழலால் உழலும் இந்தியப் பொருளாதாரம்.

சீனா உடபட முன்னணி நாடுகள் எல்லாம் வயது முதிர்ந்தவர்கள் தொகை அதிகரிப்பால் சிரமப்பட்டுக் கொண்டிருக்கையில் இந்தியா மட்டும் மக்கள் தொகையைப் பொறுத்தவரை அதிக அளவிலான இளைஞர்களைக் கொண்டுள்ளது. அத்துடன் பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த அதிக நடுத்தர வர்க்க மக்களையும் கொண்டுள்ளது. இந்தியாவின் நடுத்தர மக்கள் மக்கள் தொகை ஒஸ்ரேலியாவின் மொத்த மக்கள் தொகையிலும் அதிகமானதாகும். அத்துடன் திறன் மிக்க தொழிலாளர்களையும் இந்தியா கொண்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் சாதகமாக இத்தனை இருந்தும் ஊழல் மிக்க அரசும் அரச ஊழியர்களும் இந்தியப் பொருளாதாரத்தை முன்னேற விடாமல் செய்கின்றனர்.

### ◆ செல்வாக்கிழந்த தேசியத் தலைமை

இந்தியாவின் சிறந்த தேசியத் தலைவர் என்று சொல்லும் படியாக ஒருவரும் இப்போது இல்லை. அரசியலில் மாநிலக் கட்சிகள் அதிக செல்வாக்குப் பெற்று வருகின்றன. தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலை ஆளும் காங்கிரசுக் கட்சிக்கு அடுத்த தேர்தலில் தோல்வியடையச் செய்யும். பல கட்சிகள் கொண்ட கூட்டணி அரசு அமையும் போது அரசியல் திடநிலை கிடைக்குமா? அல்லது மோடியால் விடியுமா?

பாய நினைக்கும் பசிஇந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான தலைமை ராகுல் காந்தியா நரேந்திர மோடியா என்பது இப்போது இந்தியர்கள் முன் உள்ள கேள்வி. எந்த ஒரு பொறுப்பான பதவியையும் இதுவரை வகிக்காத கற்றுக் குட்டி ராகுல் காந்தி தலைமை அமைச்சர் பதவியை விரும்பவில்லை. அவரை நிர்பந்தித்த போது அவர் தமது கட்சி அறுதிப் பெரும்பானமையுடன் வெற்றி பெற்றால் மட்டுமே தான் தலைமை அமைச்சர் பதவியை ஏற்பேன் என்றார் ராகுல். அறுதிப் பெரும் பான்மை கிடைக்காவிடில் தொடர்ந்து மன்மோகன் சிங் தலைமை அமைச்சர் பதவியில் இருப்பதை நிதிச் சந்தையைத் திருப்திப்படுத்த மாட்டாது. சரித்திர சாதனை படைத்த ஊழல்கள் அவரது ஆட்சியில் நடைபெற்றன. மாற்றீடாக ப. சிதம்பரம் அவர்கள் தலைமை அமைச்சராக பொறுப்பு ஏற்பதற்கு அவர் சிவகங்கைத் தொகுதியில் வெற்றி பெற வேண்டும். சென்ற தேர்தலில் கருணாநிதி மாநில முதலமைச்சராக இருந்தார். வாக்கு எண்ணிக்கையின் போது பின் தங்கி இருந்த ப.சிதம்பரம் பின்னர் திடீரென வெற்றி பெற்றார். அப்படி இந்தத் தடவை நடக்க வாய்ப்பு இல்லை. இதனால் சிதம்பரம் அண்ணாச்சி புதுச்சேரித் தொகுதிக்கும் பாயும் எண்ணத் துடன் இருக்கிறார். இன்னும் ஒரு சிறந்த நிர்வாகியான பிரணாப் முஹர்ஜி ராகுலை கட்சியில் முன்னுக்குக் கொண்டு வருவதற்காக ஓரம் கட்டப்பட்டு ராஸ்ட்ரபதி பவனுக்கு அனுப்பப்பட்டு விட்டார்.

### ◆ மோடியுடன் மோதி விளையாடும் அத்வானித் தாத்தா.

குஜராத் மாநிலத்தை இந்தியாவின் முதல்தர மாநிலமாக்கியவர் நரேந்திர மோடி என அவரது ஆதரவாளர்கள் சொல்கிறார்கள்?. குஜராத்திய மக்களை அவதானிப்பவர்களுக்கு குஜராத்தை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவது இலகுவானது என்று தெரியும். அத்துடன் அண்மைக் காலங்களாக வெளிநாடு வாழும் குஜராத்தியர் அதிகமாக இந்தியாவில் முதலீடு செய்கிறார்கள். ஆனால் பெரிய அளவு ஊழலற்ற ஒரு ஆட்சியை நரேந்திர மோடி குஜராத்திற்கு வழங்கி இருக்கிறார். ஆனால் பின் தங்கிய மக்களின் கல்வி, பெண்களின் கல்வி போன்றவற்றில் குஜராத் மாநிலம் கேரளா மற்றும் தமிழ் நாடு மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் பின் தங்கியுள்ளது. மோடி தொடர்ந்து வெற்றி பெற்றதும் மதவாதக் கும்பலான ஆர்.எஸ்.எஸ் இற்கு மோடியை ரெம்பப் பிடித்து விட்டது. சுஸ்மிதா சுவராஜும் மோடியை ஆதரிக்கத் தொடங்கி விட்டார். அத்துடன் கருத்துக் கணிப்புக்கள் மோடி பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமை அமைச்சர் வேட்பாளாரக்கி தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி வாய்ப்பு அதிகம் எனச் சுட்டிக் காட்டின. இதனால் கோவாவில் கூடிய பாரதிய ஜனதாக் கட்சியினர் மோடியை முன்னிலைப் படுத்தினர். இது பழம் பெரும் தலைவரான எல்.கே.அத்வானிக்குப் பிடிக்கவில்லை கோவாக் கூட்டத்தைப் புறக்கணித்தார். தனக்கு ஆறுமாதமாவது இந்தியத் தலைமை அமைச்சராக இருக்க வேண்டும் என அடம் பிடித்தாராம் அத்வானி. மோடியை முன்னிலைப்படுத்தினால் தலித் மற்றும் இஸ்லாமியர்களின் வாக்குகளை இழக்க வேண்டும் என்பதால் நிதிஸ் குமாரும் சரத் பவாரும் தமது ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் பா.ஜ.க. உடனான உறவை முறித்துக் கொண்டனர். இவர்களுக்கு காங்கிரசுக் கட்சி தூண்டிலில் போடுகிறது. 18-06-2013 செவ்வாய்க் கிழமை அத்வானியைச் சந்தித்து 'ஆசி' பெற்றார் மோடி. ஆனால் அத்வானி ஆர்.எஸ்.எஸ் தவிர்ந்த மற்ற மதவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து மோடியின் காலை வாரும் திட்டத்துடன் இருக்கிறாராம். காங்கிரசின் ஊழலால் அதிருப்தி அடைந்த மக்கள் மோடி-அத்வானி மோதல் மீண்டும் காங்கிரசை பதவிக்குக் கொண்டு வருமா என்று தவிக்கின்றனர். மோடி அத்வானி மோதல் யாருக்கும் அறுதிப் பெரும் பான்மை கிடைக்காத நிலைமையை ஏற்படுத்தலாம்.

### ◆ கனவு பெரிது! கனவு காண்போர் பலர்!!

பா.ஜ.க உள்மோதலால் உந்துப்பட பல பிராந்தியக் கட்சிகள் இந்தியாவில் செல்வாக்குப் பெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் ஜெயலலிதா, மேற்கு வங்கத்தில் மம்தா பனர்ஜீ, உத்தரப் பிரதேசத்தில் முலாயம்சிங் யாதவ், பிகார் சரத் யாதவ், பிகார் நிதிஷ்குமார் போன்ற பலர் இந்தியாவின் அடுத்த தலைமை அமைச்சராகும் நப்பாசையுடன் இருக்கிறார்கள். பொதுவுடமைவாதிகள் மூன்றாம் அணி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதில் மம்தா பனர்ஜீயை இணைக்கத் தயாரில்லை. ஜெயலலிதா மூன்றாம் அணி வெற்றி பெற்று தான் தலைமை அமைச்சராகும் வாய்ப்பு இருந்தால் மட்டுமே மூன்றாம் அணியில் இணைவார். மூன்றாம் அணியிலும் பார்க்க அவர் பா.ஜ.கவுடன் தேர்தலின் பின்னர் கூட்டணி அமைக்கவே திட்டமிட்டுள்ளார். 2014 இல் அல்லது அதற்கு முன்னர் நடக்கும் தேர்தலில் பிராந்தியக் கட்சிகள் கணிசமாக வெற்றி பெற்றால் மைய அரசில் ஒரு நிலையற்ற ஆட்சி ஏற்படலாம். அது இந்திய பொருளாதாரத்திற்கோ அல்லது ரூபாவின் மதிப்பிற்கோ உகந்ததல்ல.






# அம்பனைச் சந்தி



அண்மையில் லண்டனில் ஒரு இசை நிகழ்வு, அம்பனை வைரவர் ஆலயத்திற்கு உதவும் நோக்கத்தை உள்ளடக்கியதாக நடந்த ஒன்று. அம்பனை கலைப் பெருமன்றத்தை இன்றும் லண்டனை நினைவு கூறும் அன்பர் ரெங்காவின் ஏற்பாட்டில், நிகழ்ந்தது இது. எங்களுக்கு அயல் ஊர் அம்பனை. புகழ் பூத்த மகாஜனக் கல்லூரியால் பெயர் துலங்கும் ஊர் இது. வயல் வெளியை பெரும்பாலான தன் நிலப்பரப்பாக கொண்ட இந்த சிற்றூர் இருபது வரையான குடும்பங்களையே தன் இருப்பாகக் கொண்டிருக்கின்றது. பாம்பும், கீரியும் ஒன்றாக வந்து படையல் உண்ணும் பத்தப்புக் கோவில், மகாஜனக் கல்லூரி, வைரவர் கோவில், தற்போது அமைந்துள்ள அலுமினியத் தொழிற்சாலை. இவை இந்த ஊரின் சிறப்புகளைக் கூறுகின்ற நிலைப்புகள்.

மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பா பெயரால் அழைக்கப்படும் தெல்லிப்பளை சந்தி முதல் அளவெட்டி ஊடாகத் தொடரும் மூளாய் வீதி, மாவிட்டபுரம் முதல் கீரிமலை வரை தொடரும் வீதியின் இடையே தச்சன்காட்டுச் சந்தியிலிருந்து ஆரம்பித்து இந்த மூளாய் வீதியை வந்து முட்டும் கொல்லங்கலட்டி வீதி என்பனவற்றின் சந்திப்பே அம்பனைச் சந்தி என்று அழைக்கப்படுகிறது. தெற்கே பெரும் வயல் வெளி, எந்நேரமும் பச்சைப் பசேல் என்று பசுமை கொஞ்சும் வயல் புறம். மேற்கு அழகொல்லைக் கிராமம். வடக்கு அளவெட்டி, பன்னாலை ஊர்கள். வடக்கே, கொல்லங்கலட்டி, வீராங்கொடை என்பன.

சின்ன ஒரு சந்தியென்றாலும், ஆள்அரவம், சனநடமாட்டம், வாகன ஓட்டம் என்பன என்றும் நிறைந்திருக்கின்ற ஊர் இது. நாகரிகம் மண் வாசனையை சென்ற வாசனையாக மாற்றாத எங்கள் சிறுவயது நாட்களில் அம்பனைச் சந்தியில் கிராமிய எழில் கப்பிக் கிடந்தது. இருபுறமும் மதகு, அதில் எந்த வேளையும் அமர்ந்து வம்பழக்கும் ஆட்கள். பறவைகளின் கழிப்பான கூச்சலுடன் கூடிய விருச்சமாக வளர்ந்த ஆலமரம். ஒரு மூலையில் ஆசிரியர்கள் தங்கும் இடமாகவும், பின்நாளில் ரியூட்டரியாகவும் இயங்கிய வீடு.

ரோட்ரோகமாக பால்க்கார துரையரின் தோட்டக்காணியை ஒட்டியமைந்த சீனியம்மாவின் தேனீர்க்கடை. மாரி வந்தால், வழுக்கையாறு வழியாக வந்து மதகை முட்டிப் பாயும் வெள்ளம். ஓட வழியில்லாத வெள்ளத்தின் வழியே தெப்பமாக மிதக்கும் பூரிஸ், சரவணன் ஆகியோரின் ஓலைக்குடிசைகள். அழகான பூக்களை ரோட்டோரமாகச் சிந்துகின்ற நீட்டுக்குக் காணப்பட்ட கொம்புலிவி மரங்கள் என்று எழில் கொஞ்சும் காட்சிகளை அந்த நாட்களில் கொண்டிருந்தது.

சீனியம்மானின் தேனீர்க்கடை 5 சதத்திற்கு வழங்கும் பால்த்தேனீர் மற்றும் மோர்த்தண்ணீர் என்பனவற்றால் பெயர் போனது. பின் நாளில் இவை கட்டிடங்களாகி பன்னாலை ராசனின் பசளைக் கடை, மணியத்தின் சிற்றுண்டிச் சாலை, அலுமினியத் தொழிற்சாலை. எங்கள் பேரனார் தம்பு வாத்தியாரின் நினைவாக ஜக்கிய நாணய சங்கம் கட்டிய பேரூந்து தரிப்பு நிலையம் என்று மாற்றம் கண்டது. மகாஜனக் கல்லூரியை ஒட்டியதாக வைரவர் ஆலயத்தை மையப்படுத்தி ஆசிரியர் சிவனேசச் செல்வன், நாகரத்தினம், முத்துலிங்கம், கெங்காதரன், குணாளன் என்போர் கூட்டில் உதயமாகி, தொடர்ந்து உழவர் விழாக்களை ஒவ்வொரு தைப்பொங்கலிலும் கொண்டாடியது அம்பனைக் கலைப் பெருமன்றம்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

புகழ்பூத்த வெற்றிகளை நாடகப் போட்டிகளில் கண்ட, நாடகங்களைப் படைத்த பெருமையும் இந்தக் கலைப் பெருமன்றத்துக்குரியது. சிதம்பரப்பிள்ளை ஐயரின் வீட்டுப் புளியமரம், சுற்றாடல் குடும்பங்களின் குலதெய்வமான வைரவர் கோவில், பாக்கியம்மா ரீச்சர் என்ற வரிசையில் தொடர்ந்த செயற்பாடுகள் அம்பனை ஊரின் பெயரை துலங்க வைத்தது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி என்று அழைக்கப்பட்டாலும், அந்தக் கல்லூரியின் இருப்பு நிலம் அம்பனைக்கே உரியது. கல்லூரியை ஒட்டி கிழக்காக பூட்டிக்கிடந்த வான்கார கிட்டினன் அம்மானின் கட்டிடத்தில் தேர்தலுக்குத் தேர்தல் தமிழ்க் காங்கிரஸின் கொடி தேர்தல் பணிமனை என்ற பெயரில் பறக்கும். அதற்கு அப்பால், சமசமாசக் கட்சிக்காரரான நாகலிங்க அம்மானின் வீடு. இந்த வீடுகளுக்கு முன்புறமாக அமைந்தது பத்தப்பு கோவில். செடிகளும், கொடிகளும் பெருமரங்களைப் பற்றி பெரும் பற்றையாக இருக்க, உள்ளே ஓலைக் கொட்டிலில் ஒரு கோவில், கருங்கல்லில் அமைந்த அம்பாள். சுற்றுப்புறத்தில் வைரவர் சூலம், பெரிய ஒரு பாம்புப் பொந்து இவை தான் அந்த ஆலயத்தின் ஊர்புறம் அமைந்த தெய்வங்கள். தாமுக் கிழவன் தான் பூசாரி. வெண்தாடியும், தலை முடியும் பொங்க அருகில் தந்தை வீட்டோடு எந்நேரமும் காணப்படும் பூசாரி.

**தாழ்த்தப்பட்ட ஒருவன் என்ற பெயரில் பூசாரியின் கையால், யாருமே எதையும் வாங்க மாட்டார்கள்.**

தாழ்த்தப்பட்ட ஒருவன் என்ற பெயரில் பூசாரியின் கையால், யாருமே எதையும் வாங்க மாட்டார்கள். தாங்களாகவே பொங்கிப் படைத்து உண்பார்கள். உள்ளேயிருந்த பெரும் புற்றுக்குள் நாகபாம்பும், ஒரு கீரியும் கோவிலோடு இருப்பதாக, பூசை முடிய தாமுக் கிழவன் படைக்கும் பொங்கலை ஒன்றாக வந்து உண்பதாக சொல்லப்படும். பரீட்சை முடிய மகாஜனக் கல்லூரி மாணவர் குழு அங்கு பொங்கலும் நடத்துவதுண்டு.

எங்கள் பூட்டனார் சின்னக்குட்டியார், அந்த ஆலயம் அமைந்தகாலத்தில் சூலத்தை இழுத்து எறிந்துகோவிலை, அழிக்க முயன்றதால் தான், ஆயுள் படுத்து நோயால் வருந்தி இறந்ததாக சொல்லப்படுவதுண்டு. கால ஓட்டத்தில் கோலங்கள் மாறினாலும், அம்பனைச் சந்தியினுடைய பெயர் தொடரத் தான் செய்கிறது.

அந்த நாட்களின் நினைவை இரை மீட்கக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக அன்றைய நிகழ்வு அமைந்தது.


SCAN Electronics

15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

15th Year Anniversary

4 Camera CCTV System £ 499
* 4 N/V Cameras (600 TVL), 19"
* 4 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

8 Camera CCTV System £ 749
* 8 N/V Cameras (600 TVL), 22"
* 8 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

16 Camera CCTV System £ 1249
* 16 N/V Cameras (600 TVL), 32"
* 16 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

EPOS System £ 1500

Wire Free Alarm £ 350
2 Door Contact, 2 PIR Sensor
1 Panic Button, Mobile Link

All the Prices Including Fitting and Transport

இனம்தெரியாத நபர்கள்
வீட்டுக்கு வந்தால் உங்கள்
கைத்தொலைபேசிக்கு எஸ்.எம்.எஸ்.
மூலம் எச்சரிக்கை அனுப்பப்படும்.

* All Prices within M25 Miles, Terms & Condiotions Apply

EPOS - Access Control System - Remote Management - CCTV - Alarm - Biomatrics System

SCAN ELECTRONICS
UNIT - 06, Zeal House, 8, Deer Park Road,
London, SW19 3UU. Mob 07956263068
Email - info@scanelectronics.com
Web - www.scanelectronics.com



GOOD NEWS FOR LAND LORDS
OUR CHEAPEST EVER BUILDING INSURANCE FOR LET PROPERTIES
DSS , UNOCCUPIED , STUDENTS LETS ARE WELCOME
CONTENTS , LEGAL EXPENSES AND RENT GUARANTEE
For immediate quotation and cover
Please Ring 020 8763 2221
We specialise in...
- HOME INSURANCE
- SHOP INSURANCE
- and All types of Insurance

ARM Associates 32 Abbots Lane,
Kenley, Surrey, CR8 5JH
Srinivasan : 020 8763 2221



OUT NOW
TAMIL PAGES 2013
20th issue of the TAMIL PAGES will be out
on the 14th of April 2013
Collect your free copy at Temples and selected Tamil Shops
Send £2.50 to the address below to receive by post
020 8543 2126 / 01792 202 682
Mobile: 0771 800 3838 / 07986 429 848 / 0771 800 3839
52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF
email:editor@tamilpages.com web:www.tamilpages.com
தமிழரின் சேவைக்கு தமிழ் ஓலைகள்

# சந்தர்ப்பங்களின் முன் எல்லோரும் சமன்



சிறுகதை

Dr. சிவனடியான்

தலைமை கிளாக்கரின் டெலிபோன் கலகலத்தது. காலங்காத்தால சனியன் சத்தம் போடத் தொடங்கீட்டுது. அன்றைய புதினங்களை பேப்பரை வாசித்துக் கொண்டிருந்த தலைமை கிளாக்கர் புறுபுறுத்தபடி ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ, நான் தான் ஏ.ஜி.ஏ. கதைக்கிறன். எனக்கு சரியான சுகமில்லை. இரண்டு நாளைக்கு வேலைக்கு வரமாட்டன். நீங்கள் தான் கந்தோர் வேலையை எல்லாம் கவனமாக மேற்பார்வை செய்யவேணும்."

"அதுக்கென்ன ஐயா, நான் பார்க்கிறேன். ஐயாவிற்கு என்ன சுகமில்லை. கொஞ்சம் பிறசர் கூடியிருக்கு ஆஸ்பத்திரி போறேன்."

"சரி ஐயா, நான் வலு கவனமாய் பார்க்கிறேன். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் போய் மருந்தை எடுங்கோ, எல்லோருக்கும் இண்டைக்கு ஒரு நல்ல செய்தி, இரண்டு நாளைக்கு பெரிசு வேலைக்கு வரமாட்டுதாம்."

அப்பாடா, இண்டைக்கெண்டாலும், நிம்மதியாய் சந்தோஷமாய் இருப்பம். எல்லோருக்கும் பூசாவிலிருந்து விடுதலையானது போல் மகிழ்ச்சி, பைல்கள் எல்லாம் மேசையின் ஓரத்தில் அடுக்கி வைக்கப்பட்டன. ஒன்றிரண்டு பேர் தனிப்பட்ட வேலைகளுக்காக வெளியில் சென்று விட்டார்கள். பெண்கள் சிறு சிறு குழுக்களாய் கடைசியாய் பார்த்த படம், ரீவித் தொடர், வாங்கிய சேலை, சட்டை, அக்கம் பக்கத்து புதினங்கள் பற்றிய ஆராய்ச்சி அரட்டையில் தொடங்கினர். அந்தாள் இல்லாதது வேலை செய்ய எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு. சரியான கொதியன். எல்லாத்திற்கும் கத்தி அதிகாரம் செலுத்தினால் ஆராலை நிம்மதியாக வேலை செய்ய முடியும். கந்தசாமி ஐயா தலைமையுரையைத் தொடங்கி வைத்தார்.

லீவு கேட்டால் சன்னதம் வந்திடும், அந்தரத்திற்கு ஒரு அலுப்பெண்டு மேசையில் சரிய ஏலாது. பத்துநிமிடம் பிந்தினால் போதும், அரை நாள் லீவு போட வேணும். அவர் பஜிரோவிலை வாறார். நாங்கள் சைக்கிள் பஸ்சிலை கஸ்ரப்பட்டு அப்பிடி நேரத்திற்கு வர ஏலுமோ?

மற்றவர்களுக்குத் தான் கடும் சட்டம். வடிவான கவர்ச்சியான பொம்பிளையள் என்றால் எல்லாத்துக்கும் சலுகை. நல்ல சிரிப்போட கதையும் பகிடியும் இது கந்தசாமி ஐயாவின் கொமன்ட். மற்றவர்களுக்குத் தான் கடும் சட்டம். வடிவான கவர்ச்சியான பொம்பிளையள் என்றால் எல்லாத்துக்கும் சலுகை. நல்ல சிரிப்போட கதையும் பகிடியும் இது கந்தசாமி ஐயாவின் கொமன்ட்.

மத்தியானம் மீண்டும் டெலிபோன் அழைப்பு வந்தது. கந்தோரில் எவரும் இல்லை. அலுவலாய் கந்தோருக்கு வந்த ஒரு பொதுசனம் கொடுத்த சிகரெட்டை மெய்மறந்து புகைத்துக் கொண்டிருந்த பியோன்தான் போனை எடுத்தான்.

ஐயாவிற்கு வருத்தம் கொஞ்சம் கடுமையாம். ஒரு கிழமைக்கு வரமாட்டாராம். பதிலுக்கு வேற ஆளும் வரமாட்டினமாம்.

அடுத்தநாள் தலைமைக் கிளாக்கர் எட்டரை மணிக்கு வந்து பெரியவரின் அறைக்குள் புகுந்து கொண்டார். அவர் வரும் போது 20 பேரில் 12 பேர் தான் வந்திருந்தார்கள். 5 பேர் லீவு, 3 பேர் ஒன்பதரைக்கு வந்து 8 மணிக்கு வந்ததாக கையெழுத்து வைத்தார்கள்.

முதல் நாள் கந்தோர் வாழ்க்கை அமர்க்களமாக கழிந்தது. வந்த பொது மக்களை பெரியய்யா வரவில்லை. பிறகு வாங்கோ என நைசாக அனுப்பி விட்டார்கள்.

யோசித்துப் பார்த்தார் கந்தசாமி. இப்படியே போனால், செக்கிங்கிற்கு யாராவது வந்தால் நான் தான் பதில் சொல்ல வேணும். தனது வேலைக்கும் பிரச்சினை வரும் என்பதை கண்டு கொண்டார். இனி கொஞ்சம் கவனிக்க வேணும் என முடிவு செய்தார். அடுத்தநாள் கந்தசாமி காலை எட்டு மணிக்கே போய் விட்டார். கந்தோருக்கு வெளியில் பொதுசனங்கள் பலர் கூடியிருந்தார்கள். கந்தோர் கதிரைகளில் யாரும் இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தன. அலுவலகத்தை திறந்து விட்டு பக்கத்துக் கடைக்கு வெற்றிலை வாங்கப்போன பீயோன் மட்டும் ஓடிவந்தான்.

பிந்தி வந்த எல்லோரும் திகைத்து விட்டார்கள். நேற்று வராதவர்கள் கள்ளக் கையெழுத்து வைக்க முடியவில்லை. சிலர் கோபமாக பார்த்து புறுபுறுத்துக் கொண்டு போனார்கள். கந்தசாமி நிமிர்ந்து கூடப் பார்க்காமல் கடைக்கண்ணால் நோட்டம் விட்டுக் கொண்டார். சிலர் வெளிப்படையாகவே ஐயா என்ன இப்படி செய்து போட்டியள் என்று கேட்டு விட்டார்கள். ஒன்பது மணியானதும் சனங்கள், பீயோன் கத்திப் பேசித் தடுத்ததையும் பொருட்படுத்தாமல் தங்கள் தங்கள் அலுவல் பார்க்கும் உத்தியோகத்தர்களைச் சூழ்ந்து தங்கள் பிரச்சிகைளை முறையிட்டுக் கொண்டிருந்தனர். கந்தோர் சந்தை மாதிரி ஆகிவிட்டது. இரண்டு நாள் வேலை செய்விக்காததன் பலன் அது எனக் கந்தசாமி புரிந்து கொண்டார்.

திடீரென மாவடத்தின் பிரபல அரசாங்கக் கட்சியின் பிரமுகரொருவர் பெரியவரின் அறைக்குள்ளே நேரே புகுந்தார். தானே கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்து கொண்டார். பெரிய பைலை தொப்பென்று கந்தசாமி முன் போட்டார். மூன்று நாளாய் அலையிறன் ஒரு பலனும் இல்லை. இண்டைக்கு எப்படியும் என்ர பிரச்சினையை முடிச்சுத் தரவேணும். கட்டளை போல் கடுமையாக வந்தது விண்ணப்பம்.

ஐயா மன்னியுங்கோ, பெரிய ஐயா இந்தக் கிழமை லீவு, அது தான் கஷ்டமாயிருக்கு. தயக்கத்துடன் இழுத்தார் கந்தசாமி வந்ததே கோபம் கட்சிப் பிரமுகருக்கு. கந்தசாமியால் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியவில்லை. பிரமுகருக்கோ பொறுமை கலைந்துவிட்டது.

பைலை பக்கொன்று திருப்பி எடுத்தபடி, நான் நேரா அரசாங்க அதிபரிடம் போறன். இஞ்சை இருக்கிற நிர்வாகச் சீர்கேட்டை அவரிட்டை கொம்பிளைன் பண்ணிறன் என எச்சரித்தபடி எழும்பினார்.

அந்தாள் அரசியல் செல்வாக்குள்ளவன். எந்த மூலை முடுக்குக்கை இடம் மாத்திறானோ தெரியவில்லை. யோசித்தபடியே பீயோனிடம் ஒரு தேத்தண்ணி வாங்கிக் கொண்டுவா நல்லாக் களைச்சுப் போனேன். எனக் காசைக் கொடுத்தார் கந்தசாமி.

எப்படித் தான் ஆழமாக யோசித்தும் அநேக விடயங்களுக்கு தீர்வு காணமுடியவில்லை. நிர்வாக சட்ட திட்டங்களும், விதிமுறைகளும் அவருக்கு பெரிதாக தெரியாது. தனது இயலாமையையும், அவமானத்தையும் மறைப்பதற்காக சப் கிளாக்கைக் கூப்பிட்டு கீழ்மட்டமாக ஆத்திரம் தீர கிழிகிழியென கிழித்ததார்.

இப்போது தான் தெரிந்தது பெரியவரின் சாமர்த்தியம். திறமை, நிர்வாகம் எல்லாம் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாக சரியாக சட்டென முடிவெடுப்பது இப்போது புரிந்தது. நிர்வாகத்தை சீராக்குவதற்கு அதிரடி நடவடிக்கை எடுத்தார் கந்தசாமி.

எல்லோரது விடுமுறைகளும் ரத்துச் செய்யப்பட்டன. வாற, போற நேரங்களை மிகச்சரியாக கண்காணிக்கப்பட்டது. நிதிச் செலவினங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. எது எப்படி நடந்தாலும் ஒரு விஷயத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு சில முக்கியமாக ஒன்றிரண்டு பெண்களுக்கு சில சலுகைகள் கொடுக்கத் தவறவில்லை. பெரியவரின் காரியதரிசி மைதிலி முக்கியமானவள்.

**சரி, பிழை, நீதி, நியாயம் என்பதெல்லாம் கீழ்ப்படியில் நிற்கும் போது மட்டும் தான். நிலை உயர்ந்து, அதிகாரங்கள், வாய்ப்புக்கள் வரும்போது அநேகர் முன்பு எதிர்த்தவைக்கு எதிராகவே நடக்கின்றன**

வேலை இல்லாவிட்டாலும், அவளைக் கூப்பிட்டு அவளுடன் கதைத்துக் கொண்டிருப்பதில் ஒரு தனி இன்பம் இருக்கத்தான் செய்தது. அவளும் ஏதாவது சில்லறை விஷயத்திற்கும் அவருக்கு முன் அமர்ந்து விடுவாள். தெரிந்தோ, தெரியாமலோ அதற்குரிய இடங்களை விட்டு சேலையும் நழுவிக் கொள்ளும்.

அவள் எங்கை கையெழுத்து வைக்கச் சொன்னாலும் யோசிக்காமல் வைத்தார். பல சலுகைகள் மற்றவர்களுக்கு தெரியாமல் கொடுத்தார். இது தவிர கந்தோர் செலவில் சில சலுகைகளை மைதிலியைத் தவிர ஒன்றிரண்டு பெண்களுக்கும் வழங்கப்பட்டன.

வேலை என்னதான் கஷ்டமாக, சிக்கலாக இருந்தாலும் மற்றவர்களை அதிகாரம் செய்து ஆட்டி வைப்பதிலும் ஒரு தனி சந்தோஷம் இருந்தது. அதனால் தான் கந்தசாமிக்கு அந்த வேலை ரொம்பவும் பிடித்திருந்தது.

திங்கட்கிழமை பெரியவர் வேலைக்கு வருதாக அறிவித்திருந்தார். கந்தோரில் அநேகர் கந்தசாமியுடன் கதைப்பதில்லை. பீயோன் மெதுவாகப் சொன்னான் ஐயா உங்களைப் பற்றி பெரிய வட்டமேசை மாநாடு நடத்துறார். உங்களை விட பெரியவர் எவ்வளவோ பரவாயில்லையாம். நீங்கள் படுமோசமாம். அற்பருக்கு அதிகாரத்தைக் கொடுத்தால் இப்படித்தான் கண் மண் தெரியாமல் நடப்பினமாம்.

எல்லோரும் பதவிக்குக் கீழே இருக்கும் போது கதைப்பினம், மேலே வந்ததும் எதிர்ப் பக்கமாய் மாறிவிடுவினமாம். சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வரை தான் நீதி, நியாயம், சரி, பிழை எல்லாம் கதைப்பினம். அதிகாரம், வசதி கிடைத்ததும் அதை விடமோசமாய் மாறிவிடுவினமாம்.

கடைசியாய் ஒன்றும் பேசாமல், அந்த அறையை ஏக்கத்துடன் பார்த்து விட்டு துக்கத்துடன் வெளியேறினார் கந்தசாமி.

*(சரி, பிழை, நீதி, நியாயம் என்பதெல்லாம் கீழ்ப்படியில் நிற்கும் போது மட்டும் தான். நிலை உயர்ந்து, அதிகாரங்கள், வாய்ப்புக்கள் வரும் போது அநேகர் முன்பு எதிர்த்தவைக்கு எதிராகவே நடக்கின்றன)*

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்....
இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை
• VEHICLE SHIPPING
• FURNITURE SHIPPING
• EXPRESS LETTER SERVICE
• PACKING SERVICE
• RELOCATION SERVICE
• MAN AND VAN SERVICE
• PACKING MATERIALS
• EUROPEAN PARCEL SERVICE
பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடங்கள்
GREENFORD WIMBLEDON VAUXHALL
BIRMINGHAM LEWISHAM
SOUTH HARROW STOKE-ON-TRENT
A-LANKA TRAVELS LTD, TOOTING
Door to Door Delivery
இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்
இலங்கையில் சகல இடங்களுக்கும் வீட்டிற்கு நேரடியாக விநியோகம்
இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவையும் உண்டு
DUNN SHIPPING LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
T : 020 8842 2020
M : 07949 361 434
M : 07949 361 313
info@dunnshipping.co.uk
www.dunnshipping.co.uk
67, Gap Road, SW19 8JA, Wimbledon, London

# மணிவண்ணன் - ஒரு மகத்தான மனிதன்

மனிதர்களை நேசித்தபடியும், போலிகளைப் புறந் தள்ளி, கிண்டலடித்து, நிராகரித்தபடியும், வாழ்ந்த ஓர் ஆளுமை இனிமேல் என்றென்றுக்கும் விழித்துவிட முடியாத ஓர் இறுதி துாக்கத்தில் ஆழ்ந்து விட்டது. அந்த இறுதி துயிலுக்கான இரங்கல் குறிப்பு ஒன்றினை பதியாவிடில் இப் பத்தியின் அர்த்தம் குறைவு பட்டதே.

2002ஆம் ஆண்டு தை மாதத்தில் மணிவண்ணன் அவர்களை சந்தித்தேன். ஒரு நாள் சந்திப்பல்ல அது. பத்து நாட்களுக்கு மேலாக இணைந்து திரிகின்றோம். அப்பொழுது ரி.ரி.என். தமிழ்ஒளி தொலைக்காட்சியில் தயாரிப்பாளராக நான் பணிபுரிந்தேன். அத்தொலைக்காட்சிச் சேவையின் ஓர் ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு விருந்தினராக மணிவண்ணன் வந்திருந்தார். அவரை வைத்து சில நிகழ்ச்சிகளைத் தயாரித்தேன். தயாரித்தேன் என்பது போக, பரிஸ், அம்ட்ஸ்ரடாம் முதலான நகரங்களில் அவருடன் உலாத்தினேன். ஈபிள் கோபுர உச்சியிலிருந்து நானும் அவருமாக பாரிஸ் மாநகர அழகை ரசித்தோம்.

இருக்கட்டும் அவை ஒரு புறம். சாதாரண மனிதர்கள் யாவரும் செய்யக்கூடிய காரியங்கள் தாம் அவை. ஆனால், இப்படியான ஓர் உலாத்துகையில் அவரினது பல்வேறு பரிமாணங்களை நான் அறிந்தேன். உணர்ந்தேன். அவ்வாறு உணர்ந்த போது ஒரு முடிவு எடுத்தேன். அவர் சாதாரணமானதொரு சினிமாக் கலைஞன் அல்லன். அதற்கும் அப்பாற்பட்ட ஒருவர்.

அவரது சினிமாக்களும் கூட என்னை அசைத்துப் போட்டதுண்டு. ஒன்றுக்கொன்று தடை வடிவத்திலேயோ, காட்சி உருவத்திலேயோ எந்தத் தொடர்பும் இல்லாத ஐம்பது திரைப்படங்களை இயக்கியிருக்கின்றார். *நுாறாவது நாள், மற்றும் 24 மணி நேரம்* என்ற இரண்டு திரைப் படங்களும் அமைதிப்படை மற்றும் நாகராஜ சோழன் எம்.எல்.ஏ. ஆகிய திரைப்படங்களும் ஒன்றுக் கொன்று தொடர்புபட்டவை. அவருடைய *பாலைவன ரோஜாக்கள், இனி ஒரு சுதந்திரம், அமைதிப்படை* ஆகிய திரைப் படங்கள் தமிழ்த்திரைப்பட வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவை. அமைதிப்படை போன்ற ஓர் அரசியல், கிண்டல் திரைப்படத்தை வேறு எந்த ஒரு இயக்குனராலும் தந்துவிடமுடியாது.

அவரைப் பார்க்கையில் சாதனையாளர் என்ற எந்த ஒரு பரிவட்டமும் அவர் தலையின் பின்னால் ஒளிரவில்லை. மிகுந்த நகைச்சுவை ததும்பிய பேச்சு, அவரிடமிருந்து உதிர்ந்தபடியிருந்தது. அவர் என்னை 'இரவி அண்ணா' என்று அழைத்தார். நான் 'அண்ணை' என்று கூப்பிட்டேன். அவர் முன் எந்தக் குழப்படியும் விடமுடியாது. 'தம்மியபடி' இருந்தேன். அவர் என்னை ஒரு போராளி என்று கருதி விட்டார். என்னை என்று அல்ல, ஈழத்தமிழர் அனைவரும் அவருக்குப் போராளிகளே. ஈழத்தமிழரை அவர் மிகுந்த மதிப்பிலும், வியப்பிலும், உயரத்திலும் வைத்துப் பார்த்தார். அதில் கொஞ்சம் எனக்கும் சுவறியது.

மனிதரை மதிப்பதில் மணிவண்ணன் மகத்தானவர். மணிவண்ணன் பற்றி எழுதிய பலர் அதனைக் குறிப்பிட்டுள்ளனர். எனக்கும் நேரடி அனுபவங்கள் பல உள்ளன. அம்ஸ்ரடாம் நகரில் ஒரு தொப்பி ஒன்றினை வாங்கி அவருக்குப் பரிசளித்தேன். அதன் பிறகு சில திரைப்படங்களில் அத்தொப்பி அணிந்து நடிப்பதனைப் பார்த்து வியந்தும், மகிழ்ந்தும் போனேன். எனது அன்புக்கு அவர் வழங்கிய பதில் மரியாதை என்று அதனை நம்புகின்றேன். அவ்வாறே பல சந்தர்ப்பங்களில் அவர் எனக்குத் தொலைபேசி எடுப்பார். 'எப்படி இருக்கிறீங்கள் இரவி அண்ணா?' என்று தான் முதல்க் கேள்வி வரும், பின்னர் உரையாடல் பத்து நிமிடங்களாவது தொடர்ந்து விடும். அத்தனை நிமிடங்களையும், ஈழத்தமிழர்கள் பற்றிய அங்கலாய்ப்பும், ஆழ்ந்த விசாரிப்புக்களாக கரைந்து விடும். அவ்வளவு அக்கறை கொண்டவர் அவர்.

2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சென்ற போது, அவரைச் சந்திக்க முயன்றேன், முடியவில்லை. கடும் சுகவீனமுற்று மருத்துவமனையில் படுத்திருந்தார். அப்பொழுது அவரைப் பார்க்க எனக்கு அனுமதியில்லை. அவரது சுகவீனத்தின் காரணத்தை அறிந்தபோது நெஞ்சு கலங்கியது. முள்ளிவாய்க்கால் துயரம், தலைவரின் மறைவு அவரை பாடாய்படுத்தியிருக்கின்றன. அது அவரின் இதயத்தை பலம் கொண்டு மட்டும் தாக்கியிருக்கின்றது. மக்கள் மீது அன்பும் கருணையும் கொண்டோர் இவ்வாறான இதய நோயால் பாதிக்கப்படுவதே இயல்பே.

மணிவண்ணன் எங்களை விட்டு மறைந்தமைக்கும் இதுவே காரணம் என்று சொல்லப்படுகிறது. திரைப்பட இயக்குநர் பாரதிராஜா ஆனந்த விகடனுக்கு வழங்கிய செவ்வியில் மணிவண்ணனின் நெஞ்சு நோகுமமாறு பலவாறாக இழித்துரைத்தார் என்று சொல்லப்படுகிறது. அச்செவ்வியை வாசித்தபோது ஒரு கணம் துணுக்குற்றேன். இப்படியும் நாகரீகமற்ற வகையில் ஒருவரை வைய முடியுமா? என்ற கேள்வியும் என்னுள் எழுந்தது.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

*'மனிதர் முகத்தை மனிதர் பழிக்கும் வழக்கம் இனியுண்டோ / மனிதர் நோக மனிதர் வாழ வாழ்க்கை இனியுண்டோ'* என்று பாடினார் பாரதியார்.

மனிதர் நோக வாழும் வாழ்க்கையை சில மனிதர்கள் செய்தபடி தான் இருக்கின்றார்கள். அதனால், சிலர் உயிரைக் கூட இழக்கின்றார்கள். மணிவண்ணனுக்கு ஏன் இவ்விதம் நிகழ்கிறது? மெல் இதயம் கொண்டிருந்ததால் தானா?

கொம்மியுனிஸ் கட்சியின் உறுப்பினராக இருந்தவர், தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டவர், பெரியாரின் வழி நடந்தவர், தமிழ்த்தேசிய வாதியாக தன்னை அறிவித்தவர், தன் மீது புலிக்கொடி போர்த்தப்பட வேண்டும் என விரும்பியவர் என எப்படிப் பார்த்தாலும் நம் மனதிற்கு மிக நெருக்கமாக நின்றவர் மணிவண்ணன். அதற்காக ஆயிரம் முறை என் தலை குனியும்.

ஆனால், அதற்கும் அப்பால் அவர் யாரிடமும் சொல்லியிருக்க முடியாத ஒன்றை என்னிடம் சொன்னார். அதனால், அவர் மீது என் மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது.

சாரு மயூம்தார் என்ற போராளி நக்சலைட் என்ற மாவோயிஸ்ட போராட்டக் குழுவின் தோழர். இந்திய அரசை உலுப்பியெடுத்த மிக முக்கிய போராளிக்குழு அது. வட இந்தியாவைச் சேர்ந்த சாருவை இந்திய அரச படைகள் தேடி அலைந்த போது, சாரு தமிழ்நாட்டில் வந்து ஒளிந்து கொண்டார். அவ்வாறு அவர் சில வருடங்கள் ஒளிந்திருந்த போதுஒரு மாதமாக மணிவண்ணன் வீட்டில் தங்கியிருந்திருக்கிறார்.

அந்த ஒரு மாதம் வரையும், சாரு காலைக் கடன் கழிப்பதற்கும், குளிப்பதற்கும் என்று காட்டுக்கும் குளத்திற்கும் அழைத்துச் சென்றவர் மணிவண்ணன் அவர்கள். சாரு மயூம்தார் என்பவரைத் தெரிபவர்களுக்கு, இது சிலிர்ப்பூட்டுகின்ற ஒரு அனுபவம். அந்த அனுபவத்திற்குச் சொந்தக்காரன் மணிவண்ணன் அவர்கள். ஆதலினால் பல்லாயிரம் முறை மணிவண்ணனுக்கு வணக்கம் செலுத்த என் தலை குனியும்.

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ டில்லியில் நஞ்சு கொடுத்தாலும் நக்க ஓடும் ஒரு கூட்டம்

13வது திருத்தத்தில் ஒன்றுமில்லை என அன்று நடேசன் சத்தியேந்திரா அடித்துச் சொல்லியும் இன்று கே குமரகுருபரன் இடித்துச் சொல்லியும் மஹிந்தவிற்கு பொன்னாடை போர்த்திய பன்னாடை நாச்சியப்பன் புது டில்லியில் கூட்டிய கூட்டத்திற்கு பிரித்தானியத் தமிழர் பேரவையின் பதவியைத் துறந்து விட்டு 1970களில் மாணவர் பேரவை புகழ் சத்தியசீலன் போனாஹ, எங்கு எவன் கூப்பிடுவான் என நாக்குத் தொங்கப் போட்டுக் கொண்டு அலையும் சால்ஸ் போனாஹ, காதர் நானா போனாஹ, மற்றும் நம் இந்தியக் கைக் கூலிகளும் போனாஹ..... சிவத்ததம்பி இருந்திருதால் அவர் வாலைப்பற்றி மாகரனும் போயிருப்பாஹ....

## ■ காவடி ஆடி வந்தால்

நியூசிலாந்தில் இருந்து கனடாவரை இந்துக் கோவில் திருவிழா என்றால் தாம் கௌரம்மிக்க கனவான்கள் போல் கூட்டுப்பிரார்த்தனை செய்யும் ஒரு கூட்டம். இன்னொரு கூட்டம் செதிக் குத்தி காவடியும் தலையில் குளிரக் குளிர பாற்செம்புகளைச் சுமந்து செல்லும் இன்னொரு கூட்டம். இவர்களை ஆய்வு செய்த ஒரு பல்கலைக் கழகத்தின் மனோதத்துவப் பீடம் தம்மைத் தாமே நோகப் படுத்தும் பக்தர்கள் கூட்டுத் தியானம் செய்பவர்களிலும் பார்க்க நல்லவர்கள் என முடிவு செய்துள்ளது. இதற்கான ஆய்வு மொரிஸியசில் நடைபெற்றது.

## ■ போய் தொலைந்த இன்னும் ஒரு தமிழின விரோதி

ஈழ விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தி எழுதி வந்த பி ராமன் என்னும் முன்னாள் இந்திய உளவாளி இறந்துவிட்டார். இன்னும் இருப்பவர்களில் ஹரிகரனும், ராமும், சோவும் சுவாமியும் முக்கியமானவர்கள்.

*-ஊருளவாரி*





Ontime Tours

Tel - 020 8573 7258 Mob - 07899 925 958

www.ontimetours.co.uk / info@ontimetours.co.uk

26.07.13 / 16.08.13 (4 Days Trip)
Paris, Disney Land, Lourdes
£ 270 per Adult. -
£ 250 Below 10 Years Old




Wales Temple
£ 35 per Adult.



European Trips ஒழுங்கு செய்து தரப்படும்
Mini Bus & Coaches Available (8 to 80 Seats)

14.07.13 Walsingham Church
£ 25 per Adult. By Coach
Hayes, Southall, Harrow, Wembley, Tooting,
Walthamstow, Eastham, Ilford & Lewisham



Lourdes யாத்திரை பற்றி விளக்கம் கொடுக்கப்படும். மேலும் விபரங்கள் அறிய எமது குழுவினரை நாடவும்.

Airport Bookings
www.ontimeairports.co.uk
info@ontimeairports.co.uk

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

